
# திராவிடநாடு




பதவி கிடைக்காத காங்கிரசார் கோலம்!

# பொங்கும் இலங்கை

## வீரக் கனல்

"காக்கி உடைகளையும், கரிய பீரங்கித் துப்பாக்கிகளையும் தாங்கிய படைகளையும், பட்டாளங்களையும் கொண்டு பயங்காட்டி, ஒரு இனத்தின் உயிருக்குயிரான சுதந்திரப் போராட்ட வேட்கையைத் தணித்துவிடலாம் என்று பிரதமர் பண்டாரநாயகா எண்ணுவது நகைப்பிற்கிடமானதாகும்.

விடுதலைத் தாகம்கொண்ட நம் வீரர்களையும் வீராங்கனைகளையும், உயிரைத் திரணமாக மதித்து, காந்திய கவசம்தாங்கி அஹிம்ஸா யுத்தமபுரிய ஆவேசமகொண்டு நிற்கும நமது தலைவர்களையும், தேச பக்தர்களையும் பலாத்கார நடவடிக்கைகள் ஒருபோதும் வெல்லமுடியா. அப்படி வென்றன என்பதற்கு சரித்திரத்திலேயே சான்று கிடையாது.

சாத்வீகத் தொண்டர் படையின் முன்னர், சர்வ சக்திவாய்ந்த பிரிட்டிஷ் இராணுவமே செயலற்றுப்போன அதிசயத்தைப் பண்டாரநாயகா உட்பட இந்த சந்ததியினர் அனைவரும், அண்டை நாடான இந்தியாவில் கண்ட பின்னரும, நமது பிரதமர் பழைய பத்தாம் பசலித்தனமான அடக்கு முறைகளில் நம்பிக்கை வைத்து, அவற்றின்மூலம் தமது ஆட்சித் தேரை ஆடாமல் அசையாமல் ஓட்டிவிடலாம் என்று கனவு காண்கிறார் என்றால், அவர் மீது நாம் இரக்கப்படவேண்டும், பச்சாதாபப்படவேண்டும், அனுதாபப்படவேண்டும்" என்று இலங்கை டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் "சுதந்திரன்" அரசியல் நிருபரிடம் கூறியிருக்கிறார்.

டாக்டர் நாகநாதன் மேலும் தொடர்ந்து தெரிவித்தாவது- "ஆகஸ்ட் போராட்டத் திட்டங்கள் பரம இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. சமயமும் சந்தர்ப்பமும் வரும்போது அவை பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் அறிவிக்கப்படும். அதுவரை பொதுமக்கள் பொறுமையாயிருக்கவேண்டும். உத்தேச போராட்டத் திட்டங்கள் என்று சில பத்திரிகைகள் பல கற்பனை நடவடிக்கைகளை வெளியிடுகின்றன. அவை ஆதாரமற்றவை. போராட்ட நடவடிக்கைகள் அனைத்தும் சாத்வீகமானவையாக இருக்கும் என்றும், பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளக் கூடியனவாக இருக்கும் என்றும் தான், நான் இப்போது கூற முடியும்"

இலங்கையில் கடந்த இரு வாரங்களாக தொண்டர் படை திரட்டிவருவதும்; இப்படையில் ஆயிரக்கணக்கான வாலிபர்களும், வயோதிகர்களும்' பெண்களுமாக இதுவரை சுமார் நாலாயிரம் தொண்டர்கள் சேர்ந்துவிட்டதும் அரசாங்கத்திற்கு பெரிய கிலியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

இதுவரை தொண்டர் படை வடமாகாணத்தின் சில தொகுதிகளிலும், வவுனியாவிலும், மூதூர்த்தொகுதியிலும் மட்டுந்தான் திரட்டப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளிலும், யாழ்ப்பாணத்தின் எஞ்சிய பகுதிகளிலும், மன்னார், முல்லைத் தீவு ஆகிய பகுதிகளிலும் படை திரட்டப்படும்போது தொகை 25,000-க்கு அதிகமாகிவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து பிரதமர் திரு. பண்டாரநாயகா புதன் கிழமை காலையில் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதறகு பூர்வாங்க ஏற்பாடுகளை ஜரூராகக் கவனித்தார் என்று தெரிய வருகிறது.

வருகிற ஆகஸ்ட் 20-ல் தமிழரசுக் கட்சியினர் சட்ட மறுபபு இயக்கத்தை ஆரம்பித்ததும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதென்ற திரைக்குப் பின்னால் இராணுவ நடவடிக்கைகளை மேறகொளள ஆங்காங்குள்ள கேந்திர ஸ்தானங்களில் இலங்கை இராணுவப்படையினரை நிறுத்தி வைப்பதென்று ஒரு அந்தரங்கத் திட்டத்தைப் பிரதமர் வகுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படையினர் போலீஸாருக்கு உடந்தையாகப் பணிபுரிவார்கள் என்று பிரதமர் மந்திரி சபை சகாக்களிடம் தெரிவித்தாராம்.

"சட்ட மறுப்பு இயக்கம் ஒன்றை நடத்துவதற்காக தமிழ் பேசும் மக்களைத் தயார் செய்துகொண்டு வருகிறார்கள். நிலைமை முற்றிவிட்டதாக எனக்குக் கிடைக்கும்

(15-ம் பக்கம் பார்க்க)

# கவிஞர் கண்ட காளை!

[ அரங்கண்ணல் ]

அந்தக் கவிஞருக்கு, மனதில் என்ன தோன்றியதோ என்னவோ, கதாநாயகனாக ஒரு காளையைத் தேர்ந்தெடுத்தார்!

சாதாரணகாளையல்ல, முரட்டுத்தனமும் பருத்த மேனியும் கொண்டது. அதன் கொம்பு பட்டு, மிரண்டு ஓடின மலைப்பாம்புகள். சீறும் சிறுத்தைகளைச் சின்னாபின்னமாக்கிற்று. சிங்கங்கள், அந்தக் காளையின் முன், சிறு எலிகள் ஆயின. கானாறும், தேன் கூடும் நிரம்பிய கானகத்தே, அது வைத்ததுதான் சட்டம். ஆயிரம் மாடுகளுக்கு. அதுதான் தலைவன். நிமிர்ந்து பார்த்தால், யாவும் நடுங்கும்! பார்வையே கட்டளை—குரலே சட்டம் என்று கோலோச்சிற்று!! அது போரிட்டுவீழ்த்தும் விரோதிகளின் உடல்களைத் தின்று மகிழ்வதற்கென்று, கழுகுகளின் கூட்டம் எப்போதும் காத்துக்கிடக்குமாம். அப்பேற்பட்ட காளைக்கு ஏற்பட்ட கதி தெரியுமா? ஒரு வாலிபக் காளை, அதை வீழ்த்திவிட்டது! எத்தனை நாளைக்குத்தான் நரம்பு முறுக்கும், மேனி மினுக்கும் நிலைக்கமுடியும்? அட்டகாசத்துடன் வாழ்ந்த அதை, ஒரு வாலிபக் காளை, வீழ்த்திவிட்டது. நடைபெற்ற சண்டையில், மண்டையில் பலத்த அடி. குருதி வழிந்து, வாய் வழியாக ஓடி, பசும்புற்றரையையெல்லாம் சிவப்பாக்குகிறது. களைப்பால் காளையால், எடுத்தடிவைக்கவும் இயலவில்லை. அண்ணாந்து பார்க்கிறது. தான் வீழ்த்தும் விரோதிகளின் உடல்களைக் கொத்தித் தின்று பழக்கப்பட்ட கழுகுகள் வட்டமிடுகின்றன. எந்த நோக்கத்தோடு? எப்போது, இக்காளையும் சாயும், நாம் சாப்பிடலாம் என்கிற கருத்தோடு! அதை நினைக்கும்போது, ஆறாகின்றன, கண்கள். எதிரே மரத்தைவிட்டு ஒரு மலைப்பாம்பு, இதுதான் சமயம் என்று, வளைந்து வளைந்து இறங்கி வருகிறது. வலை பின்னும் சிலந்திகள் தமது வேலையை ஆரம்பித்துவிட்டன, அசையாது நிற்கும் அக்காளையைச் சுற்றி சீறும் சிறுத்தைகள் அதோ தெரிகின்றன! சிங்கமோ, வாய்பிளந்து வருகிறது!!

* * *

கிழக்காளையின் தவிப்பை, Ralph Hodgson எனும் ஆங்கிலக் கவிஞர், வெகு அழகாகப் படம் பிடித்திருக்கிறார் கவிதையில்.

அடிபட்டு, குருதி வழிய, இப்போதோ இன்னும் கொஞ்ச நேரத்திலோ என்று இருக்கும்போது, அக்காளையின் மனதில் இறந்த கால எண்ணங்கள் யாவும் உருண்டோடுகின்றனவாம்! எத்தனை விரோதிகளை வீழ்த்தினோம்? நம் குரல் கேட்டு எவையெவை மிரண்டன! இந்த மாட்டுக் கூட்டம் எவ்வளவு தலை வணங்கிற்று நமக்கு?-என்று எண்ணி எண்ணி மனம் புண்ணடைகின்றதாம்!! எல்லாவற்றையும் விட, தான் தோற்கடிக்கப்பட்டதும், தன்னைத்தோற்கடித்த வாலிபக் காளையுடன் தனது கூட்டமெல்லாம் போவதைக் கண்டு, அக்காளையின் மனம் படாத பாடுபடுகிறதாம். கவிஞர், காளையின் உருவில், வாழ்ந்து வீழ்ந்தவனின் உள்ளம் எவ்வளவு வேதனை அடையும் என்பதை அவ்வளவு உருக்கமாகச் சித்தரித்துள்ளார்! கொடி கட்டி வாழ்ந்த நெப்போலியன் மனம் சின்னஞ்சிறு தீவிலே உலவ நேர்ந்தபோது என்ன பாடுபட்டிருக்கும்? இட்லர், தன் கனவெல்லாம் இடிந்து தான் இனிமேல் சாவதைத்தவிர வேறு வழியில்லை என்று எண்ணிய போது என்னென்ன எண்ணியிருப்பான்? எதிரே துப்பாக்கிகள் —நான் ஏவி விட்டால் ஒருபோது வெடித்த துப்பாக்கிகள் — இப்போது என்னை நோக்கிக் காட்டப்படுகின்றனவே, என்று கடைசி நேரத்தில் முசோலினி எப்படிக் கலங்கியிருப்பான்? ரஷ்ய நாட்டு ஜாரும், பிரெஞ்சு நாட்டு லூயியும், பிரிட்டன் நாட்டு சார்லசும், தமது கோட்டை கொத்தளங்களையெல்லாம் இழந்து, இப்போதோ இன்னும் சற்று நேரத்திலோ என்று வினாடித் துளிகளை விரலிலே வைத்துக்கொண்டிருந்தபோது, என்னென்ன எண்ணியிருப்பர்? வலம் வந்த வீரர்கள்! வரிசை வரிசையாகப் பவனி வந்த படை வகையினர்! காணிக்கை செலுத்தியோர்! கண் சென்ற திக்கு நோக்கித் தெண்டனிட்டோர்! புன் சிரிப்புக்காக ஏங்கியோர்! வெண் பற்கள் காட்டி தண்ணொளியையும் தங்கக் கோப்பைகளையும் நீட்டியோர்! கொட்டு முழக்குடன் ஊர்வலம் வந்த காட்சி!-எல்லாம், மனதிலே சுருண்டு ஓடும்போது, உள்ளம் எப்படி எப்படித் துடித்திருக்கும்? அத்தனையையும் ஒரு கிழக்காளையின் மூலம் காட்டுகிறார், கவிஞர். அவர் காட்டிடும் காளையின் நிலையினைப் படித்தபோது, உண்மையிலேயே உருக்கமும் சோகமுமே உருவாயிற்று நமக்கு! ஒரு துணை கூட இல்லை—மலைப்பாம்பு தாவி வருகிறது—சிலந்தி வலை பின்னுகிறது—கழுகுகள் வட்டமிடுகின்றன, தின்பதற்கு. நிமிர்ந்து பார்த்துவிட்டு, தலைகுனிகிறதாம், காளை. வழிந்தோடும் குருதியோடு, கண்ணீரையும் மடமடவெனக் கொட்டுகிறதாம்.

சக்தியற்ற நிலையில் சடசடவெனக் கண்ணீரைக் கொட்டிடும் காளையைக் கவனிக்க யாருமில்லை! கூட்டம், 'அப்பாடா விட்டது ஒரு தொல்லை', என்று தன் வழியே போய்விட்டது! அனுதாபமோ, 'ஐயோ, பாபம்' என்கிற எண்ணமோ, ஏற்படவில்லை அவைகளுக்கு. உடம்பில் வலுவிருந்தபோது, அக்காளை அவைகளை அப்படி ஆட்டிப் படைத்திருக்கிறது. அதனால், 'விட்டது ஒரு தொல்லை', என்று தமது வழியே

போய்விட்டன அவை. தன் கூட்டத்தையெல்லாம் அதட்டி உருட்டி அட்டகாசம் செய்ததற்குப் பதில் அன்பினைச் சம்பாதித்துக் கொண்டிருக்குமாயின், அந்திய காலம் அக்காளைக்கு இவ்வளவு விரைவில் வந்திருக்கப் போவதில்லை; இப்படி தனிமரமாகி நின்று தவித்துப் புலம்பிச் சாகும் கட்டமும் ஏற்பட்டிருக்கப்போவதில்லை. இரத்தம் சுண்டாத போது, அக்காளைக்கு இருந்தது, அன்பல்ல, சுயநலமும் திமிரும் தான்! எதனையும் மதிக்கவில்லை, அது புலிகளையும், சிங்கங்களையும், சிலந்திகளையும், மலைப்பாம்புகளையும் மட்டுமல்ல, தன்னுடைய கூட்டத்தையே அது சிறிதும் மதிக்கவில்லை. பலன்! இப்போது கதறுகிறது — கண்ணீர் வடிக்கிறது!! அதன் கொடுமைக்கு ஆட்பட்டுக் கிடந்த கூட்டமோ, வாலிபக் காளையின் தலைமையிலே அணிவகுத்துப் போய்க்கொண்டிருக்கின்றன. அந்தச் காட்சியை எண்ணி, மனம்புண்ணாகித் தவிக்கிறது, கிழக்காளை!!

* * *

ஆங்கிலக்கவிஞர், ஆய்ந்தோய்ந்துபோன கிழக்காளையைக் காட்டி, அதன் மூலம் சாய்ந்துபோன சர்வாதிகாரிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறாரல்லவா? நமது தமிழ்க் கவிஞர் பாரதியாரும் ஒரு கிழக்காளையை அறிமுகம் செய்துள்ளார், தனது கவிதையொன்றில். இந்தக் கிழக்காளைக்கு தவிப்பும் தத்தளிப்பும் ஏற்படவில்லை; அதற்குப் பதில் யோகம் அடிக்கிறது! காலைத் துயிலெழுந்து, காலிரண்டும் சோலைக் கிழுத்திடப் போய் நின்றாராம், கவிஞர்.

"மாமரத்தின் மொட்டுக் கிளையினிலே
நீலக்குயிலிருந்து நீண்ட கதை
சொல்லுவதும்
கீழேயிருந்தோர் கிழக் காளை மாடதனை
ஆழமதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்

......" கண்டாராம்! குயில், அக்கிழக்காளையை ஆவலுற என்ன கேட்டதாம் தெரியுமா? தன்மீது காதல்கொள்ளும்படி கேட்டதாம்! கிழக்காளைக்கு, இப்படியும் ஒரு யோகம் அடிக்கிறது! அழகுப் பறவை, குமுத வாய்திறந்து கூவினால் மானிட உலகை மன மகிழச் செய்யும் சக்தி வாய்ந்தது. அதுகூடி வாழ அழைக்கிறது கிழக்காளையை! எப்படி அழைக்கிறதாம், தெரியுமா? "சேற்றிலே தாமரையும், சீழுடைய மீன் வயிற்றில் போற்றுமொளி முத்தும் புறப்படுதல் கேட்டிலீரோ? நீசப் பிறப் பொருவர் நெஞ்சிலே தோன்றி வரும் ஆசை தடுக்க வல்லதாமோ?" என்று அகம் குழைந்து அழைக்கிறதாம், கிழக்காளையை! பொறுக்க முடியவில்லை கவிஞரால். அதுவோ, குயில்! குலவித்திரிய சோலை உண்டு. சுந்தரமாகச் சுற்றித் திரிந்து, தனக்கொத்தவர்களுடன் பாடிக்கிடப்பது நல்லதா? ஒரு மாட்டின் மேல் காதல் கொள்ளுதல் நல்லதா? மாடு எவ்வளவு பெரியது! குயில் எத்துணை சிறியது! இரண்டுக்கும் மணவினைசெய்துகொள்ள, என்ன பொருத்தம் இருக்க முடியும்? முதுகின்மேல் தாவி உட்காரலாம் குயில்! சாட்டை போன்ற தன் வாலினைச் சுழற்றி ஒரு அடி கொடுத்தால் போதும்—குயில், நசுங்கி இருந்த இடம் தெரியாமற் போய்விடும்! அப்படி இருக்கும் போது, கூடா நட்புக்கொள்ள முயலலாமோ? பாடிப் பறக்கும் சிட்டு, தாவி விளையாடும் மைனா, கிளைதொத்தும் கிள்ளை, அழகு கூட்டும் மணிப்புறு, இப்படி ஆயிரம் துணைகளில்லையோ பறவையினத்தில்? அதை விட்டுவிட்டு காளையின் மீதா, கருங்குயில் காதல்கொள்வது? குயில்தான் ஏதேதோ கூறிற்று என்றாலும் அதைக் கேட்டு மயங்கிடலாமோ, மாடு! அதுவும் வயதான மாடு! கவிஞருக்கு இந்தக் கூத்தைக் கண்டதும் எப்படி ஆயிற்றாம் தெரியுமா? "வெகுண்டேன் கலக்கமுற்றேன், நெஞ்சில் அனல் கொண்டேன், குமைந்தேன், குமுறினேன் மெய்வியர்த்தேன்" என்கிறார்! ஆத்திரம் தாங்க முடியவில்லை, ஆகவே கொடுவாள் தூக்கி வீசினாராம், அக்கிழக் காளையின் மீது! அடிபடும் முன்னதாகவே, ஓட்டம் எடுத்துவிட்டதாம் — காளை; குயிலும் பறந்துவிட்டதாம், "இந்தக் காட்சியை எண்ணி எண்ணிப் பார்த்தேன். எதுவும் புரியவில்லை. நீண்ட துயில்கொண்டுவிட்டேன்" என்று மாடும் குயிலும் எனும் கவிதையில் முடிக்கிறார்! இப்படி கூடா நட்பு தேடிடும் மனப்பான்மையை என்னவென்று கூற முடியும்? குயிலுக்கு கிழக்காளையின் மீது, கவிதையில் மட்டும்தானா, காதல் முளைக்கிறது? அழகுள்ள நாடுகளுக்குக்கூட "அருபங்களுடன்" கூடி வாழும் ஆசை ஏற்படவில்லையா? தனக்கொத்தவர்களுடன் வாழ்வதைவிட்டுவிட்டு, பருத்த உடலும் பொருத்தமில்லாக் குணமும் கொண்டவைகளுடன் வாழ விரும்பவில்லையா? பாரதியார்காட்டிய கிழக்காளையின் கவிதை, இந்த எண்ணத்தையே எழுப்பிற்று எனக்கு! ஆங்கிலக் கவிஞர் காட்டியதும் கிழக்காளைதான்— ஆனால், அது ஆடி ஓய்ந்துபோன காளை. அந்தியக் கட்டத்தில் கண்ணீர் வடித்துக் கதறிற்று — தன்னுடைய அட்டகாசங்களை எண்ணி. பாரதியார் காட்டியதும் கிழக்காளைதான்! எனினும், தள்ளாத வயதில் பொல்லாத ஆசைக்கு இரையாயிற்று. பொறுக்கவியலாத அவர், வாள்தூக்கி விரட்டினார்!!

அரசியலிலும், 'காளைகளை'க் காண்கிறோம், நாம். குயிலுடன் உறவாட விரும்பும் காளை! அட்டகாசத்தோடு வாழ்ந்து இன்று ஆங்காங்கும் ஏற்படும் தோல்விகளைக் கண்டு ஆயாசம்கொள்ளும் காளை! கவிஞர்கள் காட்டிய 'கதாநாயகர்களைப் படித்தபோது, இந்தக் காளைகள் நினைவே கவனத்துக்கு வந்தன!

★

## 'தேவன்' மறைவு

"ஆனந்த விகடன்" வார ஏட்டின் ஆசிரியராக இருந்து பணியாற்றிய (தேவன்) அவர்கள் சென்னையில், நோய்வாய்ப் பட்டிருந்து காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். மாற்றுக் கொள்கைகள் கொண்டவர் எனினும், கற்பனை வளமும், நகைச்சுவையும் ததும்பும் எழுத்தாற்றல் மிக்கவர் அவர். தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராயிருந்தபோது, ஒதுக்கப்பட்டே வரும் நமது எழுத்தாளர்களின் ஒத்துழைப்பையும் நட்பையும் பெற வேட்கை காட்டினர் அவர். நல்ல குணம் அவருடைய சொத்து. அத்தகையவரின் மறைவு, உண்மையில் அனைவருக்கும் வருத்தத்தையே கொடுக்கும். ஆனந்த விகடன் தொழில் மனையினருக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# வாழ்வு கேட்கிறோம்! எச்சரிக்கை வருகிறது!!

மலர் 15] ஆண்டு சந்தா ரூ. 8 [12 5-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 43

ஏதோ பட்டாடையுடுத்தி, பழரசம் அருந்தி, பல வித சுகபோகங்களுக்கு ஆட்பட்டு, அந்த ஆனந்தத்தால் பஞ்சணையில் துயில்கொண்டு கிடப்பதே தமது கடன் என்று இந்நாட்டில் வாழும் ஏழைக் கைத்தறியாளர்கள் இருப்பதுபோல் கருதிக் கொண்டு, தற்போது நடைபெறும் கைத்தறி வார விழாவிலே புத்திமதிகள் வழங்கியிருக்கின்றனர் காங்கிரஸ் அமைச்சர்கள். சென்னை நிதி அமைச்சர் சுப்ரமணியம், பொறுப்புவேண்டும்—பொறுப்புடன் செயல்புரியவேண்டும் என்று மாற்றுக் கட்சிகளுக்குப் போதகாசிரியராக மாறினாரல்லவா, சட்டசபையில்? அவர், எந்தப் பொறுப்புடன், வெளியிட்டார் என விளங்கவில்லை—அவருடைய எஜமானராம் டில்லி மந்திரி பேசியதுபோலவே அவரும் இங்கு கைத்தறி வார விழாவிலே கலந்துகொண்டு பேசியிருக்கிறார்.

சர்க்கார் செய்யவேண்டிய உதவியையெல்லாம் செய்துவிட்டதாம்! இனிமேல் தறியாளர்கள் தம் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமாம்! சர்க்கார் உதவிசெய்துவிட்டது என்று அமைச்சர் குறிப்பிடுவது, வழங்கப்படும் 'செஸ்' நிதியையும், காட்டப்படும் அனுதாபத்தையுமேயாகும். ஆட்சியாளர் காட்டிடும் அனுதாபத்தை மறுக்கவில்லை, நாம். ஆனால், இந்த அனுதாபத்தாலேயே கைத்தறி பிழைத்துவிடும், கற்பகவிருட்சம் என்று சொல்வார்களே, அதுபோல ஏழைத் தறியாளர்களுக்கு எல்லா நன்மைகளும் ஏற்பட்டுவிடும் என்று ஆளவந்தார் கருதுவது நமக்கு ஆச்சரியத்தையே தருகிறது.

மூன்றாண்டுக்காலமாக அரசினர் காட்டும் இந்த 'ஆதரவுகளால்' ஏழை நெசவாளி, அதிகம் ஊதியம் பெற்று அகமகிழ்ந்தா கிடக்கிறார்? அந்தத் 'திமிரால்' அதிகம் உழைக்க முடியாதென்று மறுத்துக் கூறுகிறார்? இல்லை! இல்லை! இடி விழுந்த அவர் வயிறு அப்படியே உள்ளது—குழிவிழுந்த அவர் கண்களில் புது ஒளி பூக்கவில்லை--கலைந்துபோன அவர் வாழ்வு இன்னும் அரும்பவேயில்லை. இருந்தும், எல்லா உதவிகளையும் சர்க்கார் செய்துவிட்டதுபோலவும், இனி செய்யவேண்டியதெல்லாம் தறியாளரிடமே இருப்பதாகவும் எடுத்துக் கூறுவதில், பொறுப்பும் இல்லை; நிலைமையைப் புரிந்துகொண்டபோக்கும் தென்படவில்லை.

சென்னை நிதி அமைச்சர், தறியாளருக்கு உபதேசம் வழங்கினார். டில்லி தொழில் அமைச்சர் மொரார்ஜிதேசாய், இந்த உபதேசத்தை வழங்கியது மட்டுமல்ல, எச்சரிக்கை வேறும் விடுத்துள்ளார்!

"ஏ! பயலே, ஏரும் கலப்பையும் கொடுத்துவிட்டேன். ஓடிப்போய் உழு" என்றாராம் ஆண்டை, எங்கேபோய் உழுவது, நிலம் எது என்பதைக் காட்டாமல். நிலம் தராது ஏரும் கலப்பையும் வழங்கிவிட்டு அதட்டி உருட்டிடும் ஆண்டையைப்போல அன்பர் மொரார்ஜிதேசாய் மிரட்டும் குரலில் எச்சரிக்கை விடுத்துள்ளார், நெசவாளர்களுக்கு!

**"சர்க்கார் செய்ய வேண்டிய உதவியைச் செய்தாகிவிட்டது. இனிமேல் கைத்தறியாளர் வசம்தான் தங்களை முன்னேற்றிக் கொள்ளும் பொறுப்பு உள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தில் 100-கோடி கெஜம் தறியிலிருந்து துணி உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஒதுக்கியுள்ளோம். உற்பத்தியைப் பெருக்கி, தறியாளர்கள் பூர்த்தி செய்விக்க வேண்டும். இல்லையென்றால் இந்த நூறுகோடி கெஜத்தையும் உற்பத்தி செய்து கொடுங்கள் என்று மில்களுக்கே ஒதுக்கிவிடுவோம் என்று எச்சரிக்கிறேன்!"** என்று புது டில்லியில் மே 5-ந் தேதி பேசியிருக்கிறார்.

மொரார்ஜிதேசாய், அடுத்த பண்டித நேரு என்று காங்கிரஸ் வட்டாரத்தால் கருதப்படும் நிலை பெற்றவர். அவர் இவ்விதம் ஏழைத் தறியாளருக்கு எச்சரிக்கை விடுகிறார்! பம்பாயில் வாழ்ந்தவர் என்பதும் ஆலையரசர்களின் ஆலிங்கனத்தை அதிகம் பெற்றவர் என்பதையும், நாடு அறியும். அவர்களிடமிருந்து, இந்த 'ஆண்டைக் குணத்தையும்' அமைச்சர்பெற்றுக்கொண்டிருக்கிறார்! அதனாலேயே ஏழைத் தறியாளர்களைப் பார்த்து எச்சரிக்கும் துணிவு ஏற்பட்டிருக்கிறது அவருக்கு!! மொரார்ஜி தேசாய் அங்கே அப்படிச் சொன்னதையும், இங்கே சுப்பிரமணியம் பேசியதையும் படிக்கும் சாதாரண காங்கிரஸ் தொண்டரும், கைத்தறி வார விழாவிலே கலந்துகொண்டு அதே விஷயத்தை ஒலிபரப்புகிறார். செஸ் நிதி உதவி, அனுதாப மொழிகள் ஆகியவைகள்தான் அமைச்சர் குறிப்பிடும் சர்க்கார் வழங்கிய உதவிகள்! இந்த உதவிகள் கிடைக்கும் இலட்சணம் எப்படியிருக்கிறது, தெரியுமா? இதோ அதையும் கேளுங்கள்:—

**"உற்பத்தியைப் பெருக்குவதில், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குள்ள முக்கிய தடை போதிய பணவசதி இல்லாததுதான். 'செஸ்' நிதி மூலம், உதவி அளிப்பதற்கு 163-லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும், பாங்கிலிருந்து இப்பணம் சரிவர கிடைக்கும் நிலையில்லை."**

**"அப்படி, பாங்கி சரிவர இத்தொகை முழுவதையும் கொடுக்கிறது என்றே வைத்துக்கொண்டாலும், தறியொன்றுக்கு ரூபாய் 90-மட்டுமே கிடைக்க முடியும். ஏனெனில், கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டுப்பட்டு 1.8-லட்சம் தறிகள் உள்ளன."**

'செஸ்' நிதியிலிருந்து எடுத்துத் தரப்படும் முன்பணத்தை நம்பி காரியம் செய்யக்கூடிய நிலை இல்லை. ஏனெனில், எவ்வளவு காலத்துக்கு கிடைக்கும் என்கிற உறுதியில்லை. தறி ஒன்றுக்கு ரூ 300 வீதம் முன்பணம் தரப்படும் என்று இந்திய சர்க்கார் **அறிவித்துள்ளதே** ஒழிய, இன்னும் நடைமுறைக்கு வரவில்லை''

''சென்டிரல் பாங்கி, ரிசர்வ் பாங்கிலிருந்து எவ்வளவு பணம் வாங்கித் தர முடியும் என்பதைப் பொறுத்தே உற்பத்தி பெருக்கம் உள்ளது. பாங்குகளுக்கும் சங்கடம் இருக்கிறது. அவர்களும் முன் பணம் கொடுப்பதில் ஜாக்கிரதையாகயிருக்க வேண்டியிருக்கிறதே!''

**''பண உதவியில்லாத காரணத்தால் கூட்டுறவு சங்கங்களுக்கு இடையில் கட்டுப்பட்டிருக்கும் தறிகளிலேயே மூன்றில் ஒரு பங்குத் தறிகள் சும்மா இருக்கின்றன! இவைகளும் இயங்கினால்தான், அதிக உற்பத்தி என்பது கைகூட முடியும்.''**

உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும்! இல்லாவிடில் மண்ணைப் போட்டு விடுவோம்!! என்று எச்சரிக்கிறார், டில்லி அமைச்சர். இதோ, தறிகளிலேயே மூன்றில் ஒரு பங்கு சும்மாயிருக்கிறது, ஏனெனில் வழங்குவதாகக் கூறப்படும் உதவி, சரிவரக் கிடைக்கவில்லை, என்று கூறப்படுகிறது. இப்படிக் கூறுவது ஒரு ஏனோதானோ அல்ல! சென்னை சர்க்காரில் கைத்தறி டைரக்டராகயிருக்கும் ஜி. இராமச்சந்திரன் என்பாரே, அவர்!! சென்னை சர்க்கார் கைத்தறி டைரக்டர் மட்டுமல்ல, ஆந்திர மாநில கைத்தறியாளர் கூட்டுறவு சங்கத் தலைவராயிருக்கும், ஐ. வீரபத்திர ராவ் என்பாரும் ''கைத்தறிக்காக அளிக்கப்படுவதாகக் கூறப்படும் நிதி உதவி, போதுமான அளவிலும், தக்க சமயத்திலும் கிடைக்கவில்லை. இது, பெரிய இடையூறாக இருக்கிறது. இந்தச் சிரமம் போக கைத்தறி நிதி உதவிக் கார்ப்பரேஷன் ஒன்றினை நியமிக்க வேண்டும்'' என்று எழுதியுள்ளார், 'எக்ஸ்பிரஸ்' ஏட்டில். அனைத்திந்திய கைத்தறிக் கழகச் சென்னைத் தலைவரான சோமப்பாவும், இந்தக் குறையினை எடுத்துக் காட்டத் தவறவில்லை ''கைத்தறித் தொழிலுக்கு அளிக்கப்படும் நிதி உதவி உரிய காலத்தில், நெசவாளர்களுக்கு கிடைக்கவில்லை. சட்டங்கள் விதி முறைகளால் தாமதம் ஏற்படுகிறது'' என்று கூறுகிறார் சோமப்பா. இவர்களனைவரையும் விஷயம் தெரியாதவர்களன்றோ, வேண்டுமென்றே குறை கூறுபவர்களென்றோ கருத முடியாது. கைத்தறித் தொழிலுக்கென்றே இருப்பவர்கள். இவர்கள் கூறுகிறார்கள் சர்க்காரின் பண உதவி சரியாகக் கிடைக்கவில்லை என்று! பண உதவி செய்வதை மனதில் எண்ணிய வண்ணம், எச்சரிக்கையும் போதனையும் புரிகின்றனர், அமைச்சர்கள்!

அதிக உற்பத்தி செய்ய முடியாதென ஏதோ நெசவாளர்கள் அனைவரும் கூடிக்கொண்டு 'சதி' செய்வதுபோல் கருதிக்கொண்டு, எச்சரிக்கை விடுத்தாரே மொரார்ஜி தேசாய், அவருடைய கவனத்துக்கு, இதோ இன்னொரு தகவல். இதையும் சென்னை கைத்தறி டைரக்டரே தருகிறார்.

**பண உதவி சரிவர கிடைக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, போதிய நூலும் ஒழுங்காகச் சரிவரக்கிடைக்க வேண்டும்!**

கைத்தறி டைரக்டரே கூறுகிறார், போதிய நூலும் கிடைக்கவில்லையாம். பண உதவியும் சரிவர இல்லை! நூலும் இல்லை!

''கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டும் மாதம் ஒன்றுக்கு **6000** பேல் நூல் தேவைப்படுகிறது. **1957-58** ஆண்டில் **390**-லட்சம் கஜம் அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், இன்னும் **2000** பேல் நூல் மாதம் ஒன்றுக்குத் தேவைப்படும். இப்போது எங்களுக்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அதில் நாலில் ஒரு பங்கு நூல்தான் மில்களிலிருந்து கிடைக்கிறது.''

நாலில் ஒன்றுதான் கிடைக்கிறது! கைத்தறி டைரக்டர், கூட்டுறவு சங்கங்களில் ஈடுபட்டிருக்கும் தறியாளர்கள் பற்றிய விபரங்களை மட்டுமே தருகிறார். மாஸ்டர் வீவர்களிடமும், சில்லரையாகவும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போர், இன்னும் என்னென்ன சங்கடங்களுக்கு ஆளாவர் என்பதைக் கூறவுமா வேண்டும்? எனினும் எச்சரிக்கிறார் மொரார்ஜிதேசாய் ''நூறு கோடி கெஜம், ஐந்தாண்டுத் திட்டப்படி உற்பத்தி செய்யவேண்டும் இல்லையேல், மில்களுக்கே இந்தக் கோட்டாவையும் ஒதுக்கிவிடுவோம்'' என்று! சென்னை நிதி அமைச்சரோ, சாத்தியமான உதவிகளனைத்தையும் செய்துவிட்டோம் என்கிறார்!

உதவிகள் செய்வதாக உத்தரவுகள் பிறப்பிப்பதுவேறு—அந்த உத்திரவுகள் சரிவரக் கண்காணிக்கப்படவேண்டும் என்பது வேறு. நமது காங்கிரஸ் அரசு, சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களையே சரிவர அமுல் நடத்தப்படுகிறதா என்று கவனிப்பதில்லை என்று மேல் சட்டசபையில் ஒரு உறுப்பினர் குற்றம் சாட்டியதுபோல, பல விஷயங்களில் 'மேஸ்திரி'யாகவே உள்ளது! அதனை, கைத்தறித்தொழிலினர் தரும் விளக்கங்கள் தெளிவாக உணர்த்தும்!!

பண வசதியும்—நூல் வசதியும் சரிவரக் கிடைப்பதில்லை. இந்த லட்சணத்திலேயே, பல லட்சம் குடும்பங்கள் நம்பி வாழும் தறித் தொழிலைப்பற்றி ஒரு மெதப்பு ஏற்பட்டிருக்கிறது, காங்கிரஸ் ஆளவந்தாருக்கு. அவர்கள் விரும்புவதுபோல, இந்தச் சங்கடங்களையும் தாண்டி அதிக உற்பத்தி செய்கிறார்கள் என்றேவைத்துக்கொள்வோம். அந்த உற்பத்தியை விலைபோகச் செய்ய என்ன மார்க்கம் கண்டுபிடித்திருக்கிறது, சர்க்கார்? ஐந்தாண்டுத்திட்டப்படி 100-கோடி கெஜம் அதிகம் உற்பத்தி செய்யவேண்டும் என்று அதட்டிச் சொல்கிறார், மொரார்ஜி தேசாய்! அந்த 100-கோடியையும் உற்பத்திசெய்துவிடுகின்றனர், தறியாளர்கள். உற்பத்தி, விலைபோகச்செய்ய என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? அந்த நூறுகோடி கெஜத்தையும், இவர்கள் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட முடியாது; ஏனெனில் இப்போது உற்பத்தி செய்யப்படும் துணிரகங்களை விற்கவே திண்டாடுகிறார்கள் — போதிய மார்க்கெட் தேடித்தரும் முயற்சியும் சரியாக இல்லை. இந்த இலட்சணத்தில் நெசவாளர் ஆண்டு ஒன்றுக்கு அதிகமாக உற்பத்தி செய்யும் **20**-கோடி கெஜத்தையும் வாங்கவேண்டியவர்கள, நமது மக்கள்தான். இந்த அதிக உற்பத்தியை வாங்கவேண்டுமேயானால் மக்கள் மன்றத்தில் வாங்கும் சக்தி அதிகரிக்கவேண்டும். வாங்கும் சக்தி அதிகரிக்க, ஏழை விவசாயி

லிருந்து பாடுபடும் பாட்டாளி வரை இப்போது சம்பாதிப்பதைவிட அதிகம் சம்பாதிக்கவேண்டும். என். ஜி. ஓ-க்கள் போன்ற மத்யதரவர்க்கத்தினர் இப்போதிருப்பதைவிட அதிக சம்பளம் வாங்கினால்தான், ஒரு புடவை எடுத்த இடத்தில் இரண்டு புடவை எடுக்கவோ, ஒரு வேட்டிக்குப் பதில் இன்னொன்று வாங்கவோ ஆசை பிறக்கும். சர்க்காரே, அதிக சம்பளம் தரமறுக்கும்போது, ஏனைய துறைகளில் ஈடுபட்டிருப்போருக்கு எங்கிருந்து அதிகச் சம்பளம் கிடைக்கும்! எப்படி வாங்கும் சக்தி அதிகரிக்கும்!!

**"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள ஒரு பெரிய குறையே, மக்களுடைய வாங்கும் சக்தி உயர்வது குறித்து எந்தவிதத் தெளிவும் இல்லாமலிருப்பதுதான்"** என்று அறிஞர்கள் கூறிவருகிறார்கள்! அமைச்சர் பெருமானே, நீங்கள் உற்பத்தி செய்யாவிடில் மில்களுக்குக் கொடுத்துவிடுவோம் என்று மிரட்டுகிறார்!!

இப்போதே கைத்தறித் துணிகள் சரிவர மக்களால் வாங்கப்படுவது கிடையாது என்பதற்காகத்தான், கைத்தறி வாரவிழாக்களும், 'ரிபேட்' முதலியவைகளும் வழங்கப்படுகின்றன. துணியும் அதிகம் உற்பத்தியாகி, அதை வாங்கும் சக்தியும் மக்களிடம் இல்லை என்றால், என்ன கதியாகும்? மீண்டும் பழைய கதைதான்!!

துணி உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். உற்பத்தி அதிகரித்து, நெசவுத் தொழில் சிறப்புற்றோங்கி, நெசவாளர் வாழ்வில் இன்பமும் எழிலும் பூத்திட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. இதனை, நெசவாளருக்கு எடுத்துணர்த்த வேண்டிய அவசியமுமில்லை. தான் உற்பத்தி செய்வதற்கு தக்க சம்பளம் கிடைக்கிறது என்பது தெரிந்தால் அவரும் அதிகம் உழைப்பார்--கடைக்காரர்களும் போட்டி போட்டுக்கொண்டு வாங்கி விற்பர்—பணம் குவியும்--தொழில் சிறப்புறும். இதனை, மிரட்டியோ, அதட்டியோ, எச்சரிக்கை விடுக்கவேண்டியதில்லை நெசவாளர்களுக்கு. ஆனால் அமைச்சர் எச்சரிக்கிறார்! அதுவும் எப்படி? "அதிகம் உற்பத்தி செய்யாவிடில் உமக்கு வரவிருக்கும் வசந்தகாலம் வராது; வாழ்வு துலங்காது," என்றல்ல! மில்களுக்குக் கொடுத்துவிடுவோம் என்கிறார்!!

மில்கள் சதா, நமது டில்லி மந்திரிகளின் கவனத்திலேயே உள்ளன.

**மில்களுக்கென்று இருக்கும் துணி வகைகளில் புடவை ரகங்களையும், வேட்டி வகைகளையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்று நாம் கூறிவருகிறோம். ஆச்சாரியார் போன்றோரும் வலியுறுத்தி வருகின்றனர்.**

கைத்தறியாளர் வாழ்வு துலங்கிடவும், உற்பத்திகள் அனைத்தும் விலை போகவும், இன்றுள்ள சூழ்நிலையில் இதைவிட வேறுமார்க்கமில்லை! ஏரும் கலப்பையும் கொடுத்த ஆண்டை நிலத்தையும் தந்தாலன்றோ, நெல் விளைவிக்கமுடியும்? அதை விட்டு விட்டு "அடா, பயலே! அடுத்த தை மாதம் அறுபது கலம் அளக்க வேண்டும்?" என்றால் எப்படி இயலும். அதிலும் ஏரும் கலப்பையுமே ஓட்டை என்றால், அதனை என்னவென்று கூறுவது?

இப்போது உற்பத்தியாகும் வேட்டி புடவைகள் விலைபோகவும் அதிகமாக உற்பத்தி செய்வது விற்பனையாகவும் வேண்டுமென்றால், அதற்குள்ளமார்க்கம், வேட்டி புடவை தினுசுகளை கைத்தறிக்கே ஒதுக்குவதுதான்.

அமெரிக்கா போன்ற இடங்களில் கைத்தறித் துணிகளுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது என்றாலும் அங்கே **'பளபளப்பும் மினுமினுப்பும்'** உள்ள துணிகளுக்கே மவுசு உள்ளதாம்! இதை சில திங்கட்கு முன்பு அமெரிக்காவிலிருந்து வந்த நிபுணர்கள் தெரிவித்துச் சென்றுள்ளனர்-இந்தப் பளபளப்பும் மினுமினுப்பும் சாதாரணமாக ஆலையில் நெய்யும் ஆடைகளில் காணலாம். இதைக் கேள்விப்பட்ட ஆலையினரில் பலர், தறிக்காரர்களது 'டிசைன்' போலவே தாமும் நெய்கின்றனராம். அவைகளுக்கு, கிராக்கி ஏற்படும் நிலைமையும் உள்ளதாம். இது தடுக்கப்பட்டு, தறிக்கு மட்டுமே அந்த உரிமை உண்டென்று சட்டம் செய்தால், கைத்தறிக்கு நல்ல மார்க்கெட் கிடைக்குமல்லவா?

அதனால்தான் நாம் ஆலைகளிடமிருந்து புடவை, வேட்டி முதலிய ரகங்கள் கைத்தறிக்கு ஒதுக்கிவிட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். இதற்கு வசதி செய்யாமல்—போதிய நிதி உதவியும் நூல் கிடைக்கும் வகையும் செய்யாத நிலையில்—சகல உதவிகளையும்அளித்துவிட்டதாகச் சண்டப்பிரசண்டம் செய்கின்றனர், அமைச்சர்கள்! 'வாங்கும் சக்தி' யில்லாத மக்களோ விலை குறைவாகக் கிடைக்கும் மில் வகைகளையே நாடுகிறார்கள்!!

தறிக்கு சில ரகங்களை ஒதுக்க வேண்டும் என்பதற்கு எது இடையூறாகயிருக்கிறதாம் தெரியுமா? இதோ, டில்லி நிதி அமைச்சர், கிருஷ்ணமாச்சாரியார் அது பற்றி கடந்த டிசம்பர் 23-ல் வெளியிட்ட தகவலைப் பாருங்கள்:

**"......கைத்தறி நெசவாளர் நிலை இந்த ராஜ்யத்தில் மிக மோசமாக இருக்கவே, சில துணி ரகங்களை கைத்தறிக்கே ஒதுக்கிவைத்துவிடலாம் என்று ராஜாஜி யோசனை கூறினார். நம் ராஜ்யத்துக்கு அது சரி. ஆனால் வடநாட்டில் நெசவாளர் எண்ணிக்கை குறைவு. அம்மாதிரி ஒதுக்கி வைத்துவிட்டால் அவர்களுக்குக் கோபம் வந்துவிடும். ஹிந்தியைப் புகுத்த வேண்டுமென்று கூறினால் நமக்குக் கோபம் வருவதுபோல் நம் ராஜ்யத்தின் பிரச்னையை மட்டும் கவனித்து அந்தப் பரிகாரத்தை அகில இந்தியா முழுவதற்கும் அனுசரிக்க வேண்டுமானால் அவர்களுக்குக் கோபம் வராதா?"**

எப்படி பதில்! வடக்கே எண்ணிக்கை குறைவாம் — கோபம் வருமாம் அவர்களுக்கு—அதனால் நாம் கும்பி கொதிக்க வாட வேண்டுமாம்!

மொரார்ஜி மில்களைக் காட்டி எச்சரிக்கிறார்— கிருஷ்ணமாச்சாரி ஆலையூரில் வாழ்வோருக்குக் கோபம் வருமே என்கிறார் — சுப்ரமணியமோ நெசவாளருக்குப் புத்திமதி கூறுகிறார்—இந்த நிலையில் எங்கும் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது. நிலையான இன்பம் ஏற்பட, இந்தச் சூழ்நிலை பயன்தருமா, என்பதை எண்ணிப் பாருங்கள்-உங்கள் உள்ளத்தில் 'வடக்கை நம்பும் வரை வாழ்வில்லை, எனும் பதில் தானாகவே வரும்.

★

# பேசும் பீகார்

"ரொட்டி! ரொட்டி!!" என்று கூவிக்கொண்டு, மன்னனின் மாளிகை நோக்கி, எண்ணற்ற ஏழை மக்கள் படையெடுத்துச் சென்ற சம்பவத்தை பிரான்சு நாட்டுச் சரித்திரத்தில் சந்திக்கிறோம். அதன் விளைவாகவே, புரட்சி பூத்ததென்றும், மன்னனின் தலையே உருண்டதென்றும் அறிகிறோம்.

இதோ, இங்கும் 'ரொட்டி! ரொட்டி!' என்கிற குரல் கேட்கிறது—ஆறாயிரம்பேர் கூட்டமாகக் கூடி, கோர்ட்டுக்கு முன்னால் சென்று கும்பியைக்காட்டி, "ரொட்டி ரொட்டி!!" என்று கூவியிருக்கிறார்கள். ஒருவர், இருவரல்ல, 6000-பேர்!!

இன்னும் ஒரு இடத்தில் முப்பதுக்கு மேற்பட்டோர் கூட்டமாகக் கூடிச்சென்று, நிலப்பிரபுவின் வீட்டிலிருந்த களஞ்சியத்தைக் கொள்ளை அடித்துச்சென்றிருக்கின்றனர்.

கூக்குரல்! கொள்ளை!! — எங்கே நடக்கிறது, தெரியுமா? முதல் ஐந்தாண்டுத்திட்டத்தால் உணவு உற்பத்தி பெருகிவிட்டது—பஞ்சம் பறந்துவிட்டது— பாலைவனம் பசும் சோலையாகிவிட்டது--என்று படம் எடுத்துக் காட்டியும், சுவரொட்டிகள் ஒட்டியும் சொன்னார்களே, அந்த இந்திய உபகண்டத்திலேதான் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

*

மாங்கிர் பிரதேசத்தில் 'பஞ்சம்! பஞ்சம்!' என்று முழக்கியவாறு 4000-பேர், பவனி வந்தனர்.

மாதிபுராவில் 6000பேர், "ஹம்புகேஹெய்ன். ரொட்டி! ரொட்டி—காப்ராதோ நகி..." என்று கூவிக்கொண்டு கோர்ட்டில் மறியல் செய்தனர்.

மீர்பூரில் 30-க்கு மேற்பட்டவர்கள், ஒரு களஞ்சியத்துக்குள்ளே புகுந்து கொள்ளை அடித்தனர்.

*

தினசரி இதுபோன்ற செய்திகள் வருகின்றன—பீகாரிலிருந்து.

இப்படி அறப்போரிலிடுபட்ட வண்ணம்; 'ஐயகோ! சாகிறோம்' என்று அடிவயிற்றினைக் காட்டி முழக்கமிட்டபடி வருவோர் எவர் தெரியுமா? விவசாயிகள்!

கலப்பைதூக்கி காலையிலே சென்று மாலை மறைந்த பிறகு வீடு திரும்பும்வரையில், நிலம் கொத்தியும், நெல்விதைத்தும், களை எடுத்தும் கஷ்டப்படுகிறார்களே அந்த விவசாயிகளுக்குத் தான் சோறு இல்லை! அரிசியும் கோதுமையும் கிடைக்கவில்லை!!

விவசாயிகளுக்கு அவை கிடைக்கவில்லை — அதனால் அடியோடு அரிசியும் கோதுமையும் இல்லாமற் போய்விட்டதா என்று பார்த்தால், அப்படியும் தெரியவில்லை. அரிசியும் கோதுமையும் ஓரளவுக்காவது இருக்கிறது! எங்கே? நிலப்பிரபுவின் களஞ்சியத்தில்!!

களஞ்சியத்தில் இருக்கிறது! ஆனால், நெல் மணிகளைச் சேகரித்துக்கொடுத்த விவசாயியின் வீட்டிலோ, வறுமையிருக்கிறது!!

தங்கம் தோண்டியெடுக்கிறான்—அவன் வீட்டில் ஒரு 'பொட்டு'த் தங்கம் கூடக் காணமுடியாது. மூச்சடக்கி முத்தெடுக்கிறான் — அவன் மனைவியின் உடலில் ஒரு சிறுமுத்துக்கூட இராது. ஆண்டு தோறும் பாடுபட்டு உழைக்கிறான் விவசாயி—அவன் உள்ளமும் இல்லமுமோ இருட்குகை. இந்த நிலை மாறவேண்டும், உழைப்பவனுக்கே யாவும் உரிமையாகவேண்டும் என்று கூறுகிறோம் நாம், அந்த நிலைமை ஏற்படாவிடின், ஏழை எரிமலையாவான், பிறகு, இங்கும் 'பிரான்சு' ஏற்படும் என்று எச்சரிக்கிறோம். "எதிர்க்கட்சிக்காரர்களுக்கு என்ன தெரியும்? ஏது பஞ்சம் இங்கே! ஏது பட்டினி! எல்லோரும் இன்புற்றிருக்கும் மாடல் சோஷியலிச மன்றோ மலர்ந்து வருகிறது" என்று பதிலிறுக்கின்றனர், காங்கிரசுத் தலைவர்கள். இதோ, பீகார் பேசுகிறது! நிலத்தில் உழுதுமடியும் உத்தமன் ஒரு வாய்ச் சோற்றுக்கும் வழியின்றி, வீதியில் வலம்வருகிறான்— வேதனை அதிகமாகும்போது களஞ்சியத்தை நோக்கிப் பாய்கிறான்!!

தம்முடைய சாதனைகளைப்பற்றி காங்கிரசுத்தலைவர்கள் வானளாவப் பேசலாம், உணவுஉற்பத்திபெருகி விட்டது, வயலெல்லாம் வளம் கொழிக்கிறது என்று மார்தட்டிக் கூறலாம். இதை மக்களுக்கு எடுத்துக்காட்ட இந்த ஊர்ப் பண்ணையார் இந்த ஆண்டு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு மூட்டை அதிகமாக விளைச்சல் செய்தார் என்று சொல்லி 'ஜனாதிபதி' மெடலும் அளிக்கலாம்! அதை, ஏடுகளில் எடுத்துக்காட்டி, பெருமையும் கொள்ளலாம்!

ஆனால் நிலைமைஎன்ன? இதோ பீகார்! பீகார் மட்டுமல்ல, நாட்டின் ஒவ்வொரு மூலையும் எந்த அழகிலிருக்கிறது என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. போது

## பிறப்பு

கழகப் பாடகர் க. வே. முருகேசன் துணைவி எல்லம்மாளுக்கு 4—5—57 அன்று பெண் குழந்தை பிறந்தது தாயும் சேயும் நலம்.

மான விளைச்சல் இல்லை! அதனால் விளைச்சல் பெற்றோர், தமது நெல்லையும் கோதுமையையும் பதுக்கிவைத்து அதிகலாபம் அடிக்க முனைகின்றனர்!

அதற்காகவே, களஞ்சியத்தில் நெல்லைச் சேகரித்து வைக்கின்றனர்—ஏழைக்கு, உணவு கிடைக்காதபோது, சரியாக அரிசியும் கோதுமையும்பெறஇயலாதபோது அவன் கண்கள் களஞ்சியத்தை நோக்குகின்றன. "கஷ்டப்பட்டேன் நான். என் உழைப்பிலே விளைந்த உணவுப் பொருள்களை அதோ, மூட்டை கட்டி வைத்திருக்கிறார், பண்ணையார். எனக்கோ, பஞ்சமும் பட்டினியும் தான்!" என்று எண்ணுகிறான். எரிமலை, எழுகிறது. சர்க்காரின் தடியடியும் துப்பாக்கியும் அவனுக்கு ஒரு பொருட்டாகப் படுவதில்லை, கொள்ளை, அடிக்கிறான்!

கொள்ளை! கொலை! அமைதிக் குலைவு! அராஜகம்!—இவையாவும் ஏற்பட்டுவிடின், பிறகு நாடு, காடு தான். இவையாவும் ஏற்படாமலிருக்க,சாந்தபோதனையும்,அகில உலகப் புகழும், 'அதோ பாரீர், கிருஷ்ணமேனன் சாமர்த்தியத்தை!' என்கிற பேச்சும் பயன் தராது. உண்மை இன்பமும் அமைதியும் ஏற்பட, 'உழைப்பவன் வசம் உலகம்' என்கிற உத்தம நெறி மலர வேண்டும்! உல்லாசமாகயிருந்த வண்ணம், கொள்ளை லாபமும், கொழுத்த வாழ்வும் அனுபவிப்போர் கொட்டம் அடங்கவேண்டும்!

இந்தக் காரியத்தைச் சாதிக்கவே வினோபா, அமைதியான முறையில் ஆங்காங்கும் சென்று நிலதானம் கேட்டு வருகிறார். அவரைப்போய் 'தரிசித்ததாக'வும், தமக்கும் இது விஷயத்தில் அக்கரையிருப்பதாகவும் காட்டிக் கொள்ளத் தவறுவதில்லை, காங்கிரசுத் தலைவர்கள். ஆனால், அவரைவிட்டு இப்பால் வந்ததும் நிலப்பிரபுவுக்கு நேசனாகஇருக்கவே விரும்புகிறார்கள்.

அறுபது நாற்பது செய்துவிட்டோம்—நிலத்தில் உழுபவனுக்கு அறுபதும், உழைக்காத உல்லாசிக்கு நாற்பதும் கிடைக்குமாறு சட்டம் செய்துவிட்டோம் என்று சொல்லி, மார்தட்டுகின்றனர். ஆனால், உழைப்பவன் வசம் உலகம் போய்விட்டதா என்று பார்த்திடின், அவன் 'மாட்டுவாரம்' 'கையேர் வாரம்' என்று சொல்லி கோர்ட்டில் நிற்கிறான்!

இப்படி ஒரு பக்கம் குமுறலும். இன்னொரு பக்கம் கோலாகலமும் அரசோச்சக் காரணம், காங்கிரஸ் ஆட்சி இருதரப்புக்கும் நல்ல பிள்ளையாகநடக்கவிரும்புகின்றது. ஏழைப் பண்ணையாளைப் பார்த்து. "இதோ உங்களுக்கு நன்மை செய்துவிட்டோம," என்கின்றனர்; மிராசுதாரர்களைப் பார்த்து. "கொஞ்சம் 'அட்ஜஸ்டு' செய்துபோக வேண்டியதுதான்.

## முகப்பில்.....

அந்தப் புகழ் இன்று மங்கிவிட்டது.

காங்கிரஸ்காரர்கள் நேர்மையும் கண்யமும் வாய்ந்தவர்கள்; தேச சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்; எந்தத் தியாகத்தையும் செய்யத் தயங்காதவர்கள் என்றெல்லாம் புகழ் இருந்தது. அது, இன்று மங்கிவிட்டது.

இன்று காங்கிரஸ்காரர்களின் முக்கிய நோக்கமெல்லாம் பதவியிலேயே இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் பதவிக்காகப் பல இடங்களில் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதாகவும் கோஷ்டி சேர்ந்துக்கொண்டு சண்டைகளில் இறங்குவதாகவும் புகார்கள் வருகின்றன.

*

"என்ன தைரியம் உங்களுக்கு? எப்போதுபார்த்தாலும் இதே குற்றத்தையா எமது சுயராஜ்ய இயக்கத்தின்மீது சுமத்துவது? இது எப்பேற்பட்ட இயக்கம் தெரியுமா?" என்று காங்கிரஸ் அன்பர்கள் கடும்சினம் கொள்ளலாம்! மேலே கூறியிருப்பது அனைத்தும் நம்முடைய வாசகமல்ல—எதிர்க்கட்சியினர் எவரும் கூறிய மொழியுமல்ல—:இந்தியாவின் முடிசூடாமன்னர், காங்கிரசைக் காக்கும் சக்திபடைத்தவர் **நேரு பண்டிதர்** அவர்களே இவ்வண்ணம் கூறுகிறார்! 'எகனாமிக்ரிவ்யூ' எனும் ஏட்டில் மனந்திறந்து வெளிப்படையாக எழுதியிருக்கிறார்—புகழ் மங்கிவிட்டது! பதவிச் சண்டை எங்கும் உள்ளது, என்று!!

நேரு பண்டிதர் மட்டுமல்ல' காங்கிரஸ்தலைவரான **தேபரும்** இதே குற்றச்சாட்டை சென்ற சில தினங்களுக்கு முன் வெளியிட்டார். தேர்தலுக்குப் பிறகு, பல இடங்களில் காங்கிரஸ்காரர்களுக்குள் ஏற்பட்ட பதவிச் சண்டைகள் சாதாரணமான முறையில் நடைபெறவில்லை. பீகார் முதலமைச்சர் தேர்தலில் நடந்த கோலாகலங்களும், மத்யப் பிரதேசத்தில் ஏற்பட்ட மாச்சரியப் போராட்டங்களும், எவ்வளவு வினோதங்களும் வேடிக்கைகளும் நிரம்பியதாக இருந்தன.

'மெயில்' ஏட்டில், ஒருவர் தீட்டியிருந்தார்—டில்லி வட்டாரத்தில் இப்போது காங்கிரஸ் எம். பி-க்கள் வலம் வருகிறார்கள்! எதற்குத் தெரியுமா? ஏதாவது 'மந்திரி சான்ஸ்' கிடைக்குமா, என்கிற ஆசையுடன்தான் என்பதாக!!

எப்படியாவது ஒரு மந்திரியாகிவிடவேண்டும், அதற்காகப் பல எம். எல். ஏ-க்களைத் தன் வசம் வைத்துக் கொள்ளவேண்டும் என்கிற முயற்சியில் ஈடுபட்டிருப்போர் ஏராளம். இந்த ஆசையால், புதிதாகக் காங்கிரசுக்குள் சேர்ந்திருப்போர் அதிகம்.

இதை நாம் கூறினால் சீற்றம் வரும், காங்கிரஸ் தோழர்களுக்கு. தேபர், பிரலாபிக்கிறார்! நேரு நெஞ்சுருக வெளியிடுகிறார்!—அதனையே, இந்தவார முகப்பில் காண்கிறோம்.

'நாற்பது' கிடைக்கும்படி செய்திருக்கிறோமே,'' என்று அவர்களையும் தாஜா செய்கின்றனர். இதுதான் மாடல் சோஷியலிசம்!

இப்படி, இருதரப்புக்கும் நல்லவர்களாக நடக்கவேண்டி இருப்பதால், உழைப்பவனுக்கே உலகம் என்கிற உத்தமக்கொள்கை மலரும் மார்க்கம் ஏற்படவில்லை. 'பீகார்' ஏற்படுகிறது.

*

கடந்த மே முதல் நாளன்று ஏடுகளில் ஒரு செய்தி வந்தது.

ஒரு லட்சம் தொழிலாளர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டதாம்.

விவசாயிகள், கட்டிடம் கட்டுவோர், கிராம நலம் பேணுவோர் என்று பணியாற்றும் 1,10,000 தொழிலாளர்களுக்குப் பாராட்டும் பரிசுகளும் அளிக்கப்பட்டதாம்.

தரிசு நிலங்களைப் பண்படுத்தி, பருத்தியும் கோதுமையும் அதிகமாக விளைவித்தனர் என்பதற்காக பல விவசாயிகள் கவுரவிக்கப்பட்டனராம்.

இதுபோல, ஏராளமான விவசாயிகள் கவுரவிக்கப்பட்டது, இது தான் முதல் முறையாம்.

எங்கே தெரியுமா இது? ரஷ்யாவில்! ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட பாட்டாளி மக்கள் கவுரவிக்கப் படுகிறார்கள்!!

இங்கோ யாராவது ஒரு பண்ணையாரை அழைத்து அதிகம் விளைவித்தார் என்று சொல்லி அவரைப் பாராட்டுகிறது, அரசு. அந்தப் பண்ணையாருக்குப் பின்னாலிருக்கும் விவசாயியைக் கவனிப்பாரில்லை! அவன் கண்ணீரை நோக்குவாருமில்லை!!

உழைப்பவனுக்கே உலகம் எனும் நெறி, ரஷ்யாவில் அரசோச்சுவதால், அங்கே உழைப்பவன் உற்சாகமாகப் பாடுபடுகிறான் — விளைச்சல் அதிகரிக்கிறது—அப்படி அதிகம் உழைத்தவன் பாராட்டும் பரிசும் பெறுகிறான்.

இங்கோ, உழைப்பாளர் தினமான மே முதல் நாள் விடுமுறை அளித்தால், எங்கே முதலாளிகளுக்குக் கோபம் வந்துவிடுமோ என்று கருதும் அரசைத்தானே பெற்றிருக்கிறோம்! இந்த அரசால், எப்படி ஏழையின் கண்ணீரைத் துடைக்க இயலும்?

புது டில்லியில் 300க்கு மேற்பட்ட வீட்டு வேலைக்காரர்கள், அதிகக் கூலிகேட்டு, மே 2ந் தேதி, வலம் வந்தனராம். தடியால் அடித்து, 30 பேரை இழுத்துக்கொண்டு போய் பூட்டியிருக்கிறது, சர்க்கார்.

ஆமதாபாத்தில் ஆலையரசர்கள் இருவர், தமது ஆலைகளை மூடி 1400 தொழிலாளர்களை, வீதியில் அலையவிட்டது மட்டுமின்றி, அவர்களுக்கான சம்பளப்பாக்கியையும் தரவில்லையாம். சர்க்கார், மவுனம் சாதிக்கிறது.

மேதினத்தில், ரஷ்யத் தொழிலாளி பரிசு பெறுகிறான்! இங்கோ — தடியடி — சிறை, தரப்படுகிறது!!

உழைப்பவனுக்கே உலகம், என்கிற உண்மையை இதயசுத்தியாக ஏற்றுக்கொண்டு, அவ்வழியில் சட்டங்களைச்செய்தாலன்றி, ஏழையின் கண்ணீரைத் துடைக்க இயலாது. அதிக உற்பத்தியாகிவிட்டது—ஆகா! ஊகூ! என்று கூச்சல் எழுப்புவதெல்லாம் நிலையான பலனையும்தராது-உற்பத்தியைவிட அது எப்படி பங்கு போடப்படுகிறது என்பதே, முக்கியமாகும். அதுபற்றி, முதலாளித்துவ அரசுகள், சிந்திக்கமாட்டா! அப்படிச் சிந்திப்பதே, சோஷியலிசமாகும். அதற்கு, காங்கிரஸ் அரசு, ஒப்பாது. ஏனெனில், இது சித்து வேலைகளைச் செய்து, இரு சார்பினரையும் 'தாஜா' செயயப் பார்க்கிறதே ஒழிய, ஏழையின் வசம் உலகத்தை உரிமையாக்க வேண்டும் என்கிற அடிப்படைக்காக உழைக்கவில்லை. அதனால் தான், 'பீகார்'கள் எற்படுகின்றன.

★

# கைத்தறியின் கதி!

புலவர் ந. கந்தசாமி

கைத்தறி யாளன் கதி கேளும்!
கடைநிலை யாளன் கதி கேளும்!
வைத்தியம் அவன் தன் நோயினுக்கு
வழங்கிடும் மருந்தின் வகை கேளும்

மில்த்துணி வரியால் ஒரு புறமும்
விசைத்தறி விரிவால் மறுபுறமும்
நல்த்துணை புரிவோம் எனப்பிதற்றி
நடிப்பது கைத்தறி நலத்தினுக்கோ?

அமணக் கெண்ணெய் ஒரு துளியும்
அக்கினித் திரவம் மறு துளியும்
சாமியுன் கண்ணில் பெய்குவதால்
சார்ந்திடும் கொடுநோய் தவிர்ந்திடுமாம்

அம்பர் சர்க்கா ஒருபுறமும்
ஆலையின் வளர்ச்சி மறுபுறமும்
நம்பள் சர்க்கார் நடத்துவது
நகைதரும் செயலே நாடறியும்!

பட்சணம் பாயசம் ஒரு பகுதி
பாழும் மதுவிஷம் ஒரு பகுதி
கச்சிதமாகக் கலந் தளித்தல்
சடும்பசி போக்கும் கைத்திறனும்!

பிச்சை யெடுக்க விட்டவர்கள்
பிள்ளையை விற்க விட்டவர்கள்
நச்சு மனத்தால் தொடங்கிவிட்டார்
நம் கைத்தறியை நசுக்குதற்கு!

# ஒற்றுமையால் உயர்ந்த நாடு (2)

ஜி. கோதண்டராமன்

பிறகாண்டன்களின் தனித்தனி நலனையோ அல்லது அக்காண்டன்களின் கூட்டாட்சியின் நலனையோ பாதிக்காத வகையில், ஒரு காண்டன் மற்றொரு காண்டனோடு உடன்படிக்கை செய்து கொள்ளலாம்.

1830-ம் ஆண்டில் எழுந்த பிரெஞ்சு லிபரல் புரட்சியின் காரணமாகக் காண்டன்களின் அமைப்பு முறைகளிலே மாற்றங்கள் வேண்டுமென்ற ஓர் மாபெரும் இயக்கம் தோன்றிற்று. இதன் விளைவாக 1832-ம் ஆண்டில் நிறைவேறிய கூட்டு உடன்படிக்கையைத் திருத்தியமைப்பதற்காக 'டையட் சபை' ஒரு கமிஷனை நிறுவிற்று. இம்முயற்சி தொடக்கத்தில் சிறு முன்னேற்றத்தைத்தான் அளித்ததென்பதல்லாமல், உள்நாட்டுவேற்றுமைகளைத் தோற்றுவிக்கக் காரணமாய் அமைந்தது. 1845-ம் ஆண்டில், ஏழு கத்தோலிக்கக் காண்டன்கள் ஒன்றுகூடி சாண்டர் பண்ட் என்ற ஒரு தனிலீக்கை உருவாக்கின, இந்த லீக் அமைப்பு, மேலும்வேற்றுமைகளை வளர்த்து, உள்நாட்டுப் போருக்கு இடமளித்தது. ஆனால், இந்த உள்நாட்டுப்போர் சின்னாட்களில் ஒடுக்கப்பட்டுவிட்டது.

இத்தகைய உள்நாட்டுக் குழப்பங்களினாலும்; 1848-ம் ஆண்டில் ஐரோப்பா முழுவதும் கொந்தளித்த விடுதலை இயக்கத் தூண்டுதலினாலும் ஸ்விஸ்டையட் சபை இப்பொழுது ஒரு புதிய அரசியலமைப்பு முறையை அங்கீகரித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு மகத்தான வெற்றி பெற்றதைக் கண்ட ஸ்விஸ் மக்கள் 1848-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 12-ந் தேதி தங்கள்நாட்டில் ஒரு பெடரல் சர்க்காரை அமைத்தார்கள். எனினும் பெடரல் சர்க்காரின் அரசியல் அமைப்பு முறையால் சுருக்கப்பட்ட சில அதிகாரங்களைத் தவிர, மற்ற அதிகாரங்களைச்செலுத்தும் சர்வசக்திவாய்ந்த அமைப்புகளாகவே, 22-காண்டன்களும் தொடர்ந்து இயங்கின.

இவ்வாறு அமைக்கப்பட்டபெடரல் அரசாங்கம், சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பெடரல் சட்டசபையிடம்ஒப்படைத்தது. (இது நம் நாட்டுப் பாராளுமன்றத்தை ஒத்த சபையாகும்) இந்தச் சட்டசபை இரு கூறுகளைக் கொண்டது. ஒன்று மேல்சபை மற்றொன்று கீழ்ச்சபை அல்லது தேசியக் கவுன்சில் முதற்சபை, காண்டன்களின் சமஎண்ணிக்கையுள்ள பிரதிநிதிகளைக் கொண்டதாகும். இரண்டாவது சபை மக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதிநிதிகளைப் பெற்றதாகும். ஸ்விஸ் நாட்டின் ஆட்சிமுறை இயந்திரம், கீழ்ச்சபையால் (தேசியக் கவுன்சிலால்) தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பிரதிநிதிகள் அல்லது அமைச்சர்களைக் கொண்ட ஒரு பெடரல் கவுன்சிலால் இயங்கப்படுகிறது. நீதித்துறையின் நிர்வாகம், ஒரு பெடரல் டிரிப்யூனலால் நடத்தப்படுகிறது. இந்த டிரிப்யூனலுக்கு நாட்டுச் சட்டங்களைச் செல்லத்தக்கவை அல்ல என்று முடிவு கூறும் அதிகாரம் கிடையாது. பெடரல் அரசியல் அமைப்பு முறையால் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை நேரடியாகத் தனிப்பட்ட நபர்களின்மீது செலுத்துவதற்குப் பெடரல் அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. காண்டன்களின் ஆளுகைக்குட்பட்ட பிராந்தியங்களிலேயோ அல்லது சுய ஆட்சி அதிகாரங்களிலேயோ பெடரல் அரசாங்கம் பொதுவாகத் தலையிடாது. ஆனால் காண்டன்களுக்குள்ளே ஏற்படும் பூசல்கள் காரணமாக அமைதிக்குப் பங்கம் விளைந்தாலோ, காண்டன்கள் ஒவ்வொன்றுக்கும் இடையே சச்சரவுகள் ஏற்பட்டாலோ, காண்டன்களின் வேண்டுகோளின்றியே தலையிடப் பெடரல் அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு இத்தகைய அதிகாரத்தைப் பெடரல் அரசாங்கம் 11 முறைகள் செலுத்தியிருக்கிறது.

காண்டன்களின் அதிகாரங்களை (குறிப்பாக இராணுவ விவகாரங்கள், சிவில் கிரிமினல் சட்டங்கள் இவைகளில்) பெடரல் சர்க்கார் மிகுதியாகக் குறைக்க முனைந்ததால் 1872ம் ஆண்டில் பெடரல் சட்டசபை சமர்ப்பித்த அரசியலமைப்புச் சட்டத்தை மக்கள் நிராகரித்தனர். இதனால் பெடரல் சட்டசபை பிறிதொரு அரசியலமைப்பைத் தயாரித்தது. இந்தப் புதிய அரசியலமைப்பு காண்டன்களுக்குச் சில சலுகைகளை வழங்கியது. எனினும் இராணுவ அதிகாரத்தையும், வியாபாரச் சட்டங்களை இணைக்கும் ஒரு மகத்தான பொறுப்பையும், இந்த அரசியலமைப்பு பெடரல் அரசாங்கத்திற்கே அளித்தது. இந்த அரசியலமைப்பு 1872ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 1,98.000 ஓட்டுக்கள், 7½ காண்டன்களின் ஆதரவு இவைகளுக்கு எதிராக 3,40,000 ஓட்டுக்களையும் 14½ காண்டன்களின் ஆதரவையும் பெற்றுச் சட்டமாகியது. இதிலிருந்து

பெடரல் அரசியலமைப்பு பலமுறைகளில் திருத்தப்பட்டிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள், மக்களின் பொது வாக்கெடுப்புக்குப் பின்புதான் சட்டமாக்கப் படுகிறது. இதனால் மக்கள், ஸ்விஸ் ஆட்சியில் நேரடியாகவே பங்கு கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஸ்விஸ் நாட்டுப் புதிய அரசியலமைப்பு, ஆட்சியில் மக்கள் நேரடியாகப் பங்கு கொள்ள ஓர் அரிய வாய்ப்பினை அளித்ததோடல்லாமல் பெடரல் அரசாங்கத்தின் அதிகாரத்தையும் பலப்படுத்தியது. இதன் விளைவாகப் பொருளாதார வரம்பு சமூக இன்ஷ்யூரன்ஸ் திட்டம் என்ற மகத்தான பொறுப்புகள் பெடரல் சர்க்காரின் மீது விழுந்தன. இவ்வாறு பெடரல் சர்க்காரின் அதிகாரங்கள் நிலையாகப் பெருகிக்கொண்டு வந்தபோதிலும், இன்னும் காண்டன்கள், முக்கியத்துவம் வாய்ந்த கல்வி.மத ஸ்தாபனங்கள், நேரடி வரிவிதிப்பு நீதிநியாயப்பகுதி இவைகளையொட்டிய அதிகாரங்களை வகித்து வருகின்றன. மேற்கூறியவாறு, ஸ்விஸ் நாடு ஒன்றுபடுவதற்கு ஆறு நூற்றாண்டுகள் தேவைப்பட்டன. இவ்வொற்றுமையை அடைவதற்கு முன் பெடரல் அரசாங்கம் கருத்து வேறுபாடுகளையும், வெளிநாட்டு ஆக்ரமிப்பையும் சமாளிக்கவேண்டி இருந்தது. இறுதியாகப் பெடரல் அரசாங்கம், காண்டன்களின் வேறுபாடுகளை மதித்த காரணத்தால், பலம் வாய்ந்த ஒரு மத்திய கூட்டுச் சர்க்காரை நிறுவ முடிந்தது. இந்த மாறுதல்கள் ஏற்படுவதற்கு, ஒன்றுபடவேண்டும் என்ற ஸ்விஸ் மக்களின் உள்ளக் கிடக்கையும், காண்டன்கள் தங்களுக்கிடையில் இளைத்த வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது அவைகளைச் சுமுகமுறையில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கடமையுணர்ச்சியால் உந்தப்பட்டு செய்த பெரு முயற்சியும், உறுதுணையாக நின்றன என்பது நன்கு புலனாகும். ஸ்விஸ் நாட்டின் வரலாறு, வெவ்வேறு கொள்கைகள் கோட்பாடுகள், மதங்கள் கொண்டிருப்பினும் ஒரு நாடு யாங்ஙனம் மொழிவழிப் பிரிந்து இனவழி ஒன்றுபட்டு அரசோச்ச முடியும் என்பதை நன்கு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஸ்விஸ் நாட்டின் தேசியம் அல்லது நாட்டுப்பற்று, அந்நாட்டு மக்களாலே நன்கு ஓம்பப்படுகிறது. இந்தத் தேசிய உணர்ச்சியை அரசியல் துறைகளிலே மட்டுமின்றி, சடங்குகள் விடுமுறை நினைவுச் சின்னங்கள் திறமை, விளையாட்டுக்கள், பாட்டு, கலை வளர்ச்சி, இசை, நாடகங்கள் இவைகளிலேயும் கட்டிக் காத்து வரப்படுகிறது. இந்தப் பழக்க வழக்கங்கள், ஸ்விஸ் மக்களின் சீரிய பண்பாட்டையும், அவர்களின் உயர்ந்த வாழ்க்கை நெறியையும் இனிது எடுத்தோதுகின்றன.

கல்வித் துறையில், ஸ்விஸ் பள்ளிகள், மாணவர்களின் வாழ்க்கைக்கும் சுகாதாரப் பயிறசிக்கும் பெரிதும் உதவுகின்றன. ஸ்விஸ் மக்கள் சுகாதரப் பயிற்சியை ஒட்டிய முறைகளைப்பற்றிய விவாதங்களில் காட்டும் ஆழ்ந்த பற்றும், வேற்று நாடுகளின சிந்தனையையும் அனுதாபத்தையும் தூண்டும் வகையில் மொழிகளை அவர்கள் போதிகரும் சிறந்த பாங்கும் பாராட்டுக்குரியனவாகும். செயல் முறையில் பயன்படத்தக்க—வியாபாரம், தொழில் விவசாயம் பற்றிய விரிவுரைக் கழகங்களும், வீட்டுப் பொருளாதாரத்தைப்பற்றிய விளக்கப்பள்ளிகளும், தேசிய ஆசிரியர்கள் இயற்றிய நூல்களுக்குத் திறம்பட எழுதிய சிறந்த ஊரைகளும், நாட்டைப் பற்றியனவும், சுகாதாரத்தைப் பற்றியனவுமாகி நலங்கெழுமிய புத்தகங்களும், எவ்வயதுக் குழந்தைகளையும் பள்ளி உவகைப் பயணத்தில் பங்கு கொள்ளச் செய்யும் பொதுவான பழக்கமும், ஸ்விஸ் மக்களின் நனி சிறந்த நாகரிகத்தைத் தெள்ளிதிற் புலப்படுத்தும். குறிப்பாக ஸ்விஸ்மக்களின்குடிமைபயிற்சியும் பொதுவாழ்வில் அவர்கள்காட்டும் பேரார்வமும், அவர்களின் அரசியல் சுதந்திரமும், பள்ளியாசிரியர்களுக்கு அவர்கள் அளிக்கும் பெருமதிப்பும் போற்றற்குரியவை. சுருங்கக் கூறின், ஸ்விஸ் பண்பாடும், நாகரிகமும், அரசியல் வாழ்க்கையும், பிற நாடுகளால் பினபற்றக்கூடிய பெற்றியினவாகும் என்பது வெளிபபடை.

★

# உரிமை

ஒற்றுமையில் தமிழர்கள் நாய் என நடந்து, பூனைகளுக்கும் புலிகளுக்கும் தம் உணவைப் புசிக்கக் கொடுக்கின்றனர். இந் நிலையை மாற்ற. தமிழர் மொழிப்பற்றும், இன உணர்ச்சியும்கொண்டோராக வேண்டும். தாய்மொழிப் பற்று, உலகில் எந்தப் பகுதியில் வாழும் தமிழனையும் ஒன்றாக்க வேண்டும். அவனது நலத்தில் நாட்டமுடையதும், அவனைக் காப்பாற்ற முன் வருவதுமான வகையில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்ட முழு உரிமையுள்ள தாயகத்தையும் தமிழர் காண வேண்டும். அதற்குத் துணையாகும் இன உணர்ச்சியையும், உரிமை வேட்கையும் வளர்க்கவும் வேண்டும்.

இந்தக் குறிக்கோள் வெற்றி பெறும்போதுதான் 'ஒற்றுமை' பொருள் உடையதாகும். உலக ஒற்றுமையும், திருக்குறளின் பொன்னான கருத்துக்களால் எளிதாகும். தமிழும் குறளும் உலக மன்றங்களில் இடம் பெறும்படிச் செய்யும் உரிமை நமக்குண்டு. அந்த உரிமையைப் பெறும் நாள் தான், 'ஒற்றுமைக்குப் பொருள் காணும் நாளாகும். அல்லாதவரை அடிமைகளும் ஆண்டைகளும் சேர்ந்து எந்த அமைப்பிலும் ஒற்றுமையை நிலை நிறுத்த முடியாது என்பதை உலகோர் உணர வேண்டும்.

அதேபோல் நாமும், ஒற்றுமையின் பேரால் அடிமை வாழ்வை ஏற்பதைவிட உரிமை வாழ்விற்காக 'உயிரையே' இழக்கவும் உறுதிகொள்ள வேண்டும். உரிமை வாழ்வே ஒற்றுமை வழி என்பதையும் நிலைநாட்ட வேண்டும்.

— க. அன்பழகன்

# துணைவேந்தருக்கு!

“வாலிபர் தம் இதயங்களையெல்லாம் கவர்ந்த ஒரு புதுசக்தி வந்திருக்கிறது சட்டசபைக்கு! பலரும் தீவிரமும் பொருந்திய அவர்கள் நாட்டுக்குப் பயன் படுவார்கள் என்று நம்புகிறேன். உருவான யோசனைகளுடனும், சட்டத்துக்குட்பட்டும் இவர்கள் இயங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். சாதிமத வித்தியா சங்களைப் பார்க்கப்போவதில்லை என அறிவித்துள்ளார்கள்! இதற்காக, நாம் அவர்களுக்கு நன்றிகூற வேண்டும். இவர்கள் வெல்க!” என்று சென்னை மேல் சபையிலே, நம்மைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயண சாமி (பிள்ளை) அவர்கள். ஏடுகளில் வந்த அவருடைய பேச்சிலே, அன்பும் அரவணைப்பும் ததும்பக் கண்டோம்! “ஏடா, மூடா! இவர்களுக்கென்ன தெரியும்?” என்று நம்மைச் சபிப்பதே தமது பெரியமனிதத் தன்மைக்கு அடையாளம் என்று எண்ணிடுவோரின் மத்தியிலே, புதுமைக்கு வரவேற்பும் வாழ்த்தும் வழங்கும் பெருந்தன்மை கொண்டோரின் ஆசிகளை நாம் அன்போடு வரவேற்கிறோம். புதுச்சக்தி!-என்று குறிப்பிட்டு, இச்சக்தி வெல்க என்றும் அன்புரை நல்கிய அன்பர் நாராயணசாமியார் அவர்கள் பெருமூச்சையும் உதறிடத்தவறவில்லை. நாம் வடக்கு தெற்கு பேசுகிறோமாம்! “இது, அவ்வளவு நல்லதல்ல என்பதை அவர்களே உணருவார்கள்” என்றும் குறிப்பிட்டு, இதை மட்டும் அவர்கள் விட்டுவிட வேண்டும், இந்தியா ஒரே நாடு என்கிற உண்மையினை உணரவேண்டும் என்று உரைத்திருக்கிறார். துணைவேந்தரின் பொறுப்பிலிருப்பதாலா அல்லது உண்மையிலேயே அவரது உள்ளக்கருத்தே இதுதானா என்பதை இன்னும் கொஞ்சக்காலம் கழித்தே நாம் முடிவு கட்ட வேண்டும். எனினும், துணைவேந்தருக்கு ஏற்பட்ட சஞ்சலத்தையும் சந்தேகத்தையும் போக்கிட வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

வடக்காவது! தெற்காவது!!— என்கிறார், பெருமூச்சோடு,

இப்படிப் பேசுவது, இந்திய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் என்கிறார்.

அதனால் இது தவறு!-என்றும் போதிக்க முன்வருகிறார்.

‘இந்தியா’ என்பது எது? இந்திய ஒற்றுமை என்று எது குறிப்பிடப்படுகிறது?— என்பதற்கு நாம் இதுவரை எவ்வளவோ, விளக்கங்கள் அளித்து வந்துள்ளோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஒவ்வொரு இடமும் எதிரொலிக்கும் இதனை! எனினும் துணைவேந்தர், வடக்காவது தெற்காவது இப்பேச்சு ஒற்றுமையைச்சீர்குலைக்கும்என்கிறார். துணைவேந்தர், தனக்கு ஓய்வு இருக்கும் போது ஒருமுறை, வானளாவக் காட்சி தரும் பல்கலைக் கழக நூல் நிலையத்துக்குள் புகுந்து திரும்பிடின், அவரே நமக்காக வாதாடும் வக்கீலாவார்! ஏனெனில் திராவிடத்தின் தனிச் சிறப்புக் குறித்தும், பெரிய பெரிய நாடுகளானதால் அழிந்துபோன அரசுகளைப்பற்றியும், இந்திய உபகண்டத்து அரசியல் எப்படியெப்படி இருக்கவேண்டும் எனபது குறித்தும் பேசும் ஏடுகள் ஏராளம் உண்டு அங்கே!!

துணைவேந்தர் போன்றோர், தமிழின் மரபையும் பண்பையும் காப்பதில் செலுத்திவரும் நாட்டம் குறித்து மகிழ்பவர்கள் நாம். ஆகவே, அவரது ஊக்கம் இவ்வழியில் செல்லவேண்டுமென எதிர்பார்க்கிறோம். வெறுப்பு விருப்பற்று எதனையும் ஆய்ந்திடும் பண்பு படைத்தோர், நிச்சயம் விடுதலைப் படைக்கு உறுதுணையாக அமையவே செய்வர்! ஆகவே, வரலாறு வழங்கும் விளக்கங்களை, அவருக்கே விட்டுவிடுகிறோம் — அறியக்கூடியவர் என்பதால்.

வடக்காவது! தெற்காவது!!— என்று பெருமூச்சுடன் பேசப்படுகிறதே, இந்தப் பாசமும் பற்றும் துணைவேந்தர் போன்றோரிடமிருக்கின்றளவுக்கு, வடவரிடம் உள்ளதா? தமிழன், வந்தாரையெல்லாம் வரவேற்றுச் சந்திக்கு வந்தான், எனக் கூறுவதுண்டு. அந்த வந்தாரை வாழவைக்கும் நற்பண்பு கெட்டிடவேண்டுமென நாம் கூறிடவில்லை. அந்த பண்பு கூட வேண்டாம், வாழ வைக்கும் மனம் கொண்டோரிடம் பரிவு காட்டும் மனோபாவமாவது வடக்கே உண்டா? துணைவேந்தருக்குத் தெரிந்திருக்கக் கூடும் அச்செய்தி.

திருவாளர் மணவாள இராமானுசம் அவர்கள், அ’ நகரின் துணைவேந்தராகத் துலங்கிய காலை வேண்டுகோள் ஒன்று விடுத்தார், டில்லிக்கு. அருகிலிருக்கிறதே பூம்புகார் நகரம், கடல்கொள்ளப்பட்டு. அதனை ஆராய்ந்து பார்ப்பதற்கான வசதிகளையும் நிதி உதவிகளையும் தாருங்கள் என்று! கோடிக்கணக்கில்கூட வேண்டாம் —ஒருசில இலட்சங்கள் போதும்!! மாணவர்களும் பேராசிரியர்களும் முனைந்து நின்று, தக்க வசதியுடன் முயன்றால்,ஆண்டு மாண்டு போன அந்த அழகு நகரைப் பற்றிய பல உண்மைகளை அறியலாம் — கோவலனும் மாதவியும் காதற்பள்ளு பாடிய இடங்களையும், பத்தினித் தேவியாம் கண்ணகி அம்மை கலங்கிநின்ற குடிலையும், கரிகால் பெருவளத்தான் வடநாட்டிலிருந்து மீண்டதும் கட்டுவித்த தோரணவாயில்கள் அமைந்து விளங்கிய இடங்களையும், முத்துக் கடைகளையும், மோகனப் பாக்கங்களையும் பற்றி அறியலாம். அந்த ஆர்வத்தோடு தான் உதவி கேட்டார் மணவாள இராமானுசம்! எதையெதையோ தோண்டியெடுப்பதிலும், எத தெற்கோ விழாக் கொண்டாடுவதிலும் சிரத்தை செலுத்தும் டில்லி; அனுமதித்ததா? ஆதரவு தந்ததா? வேண்டுகோளை வீசியெறிந்தது! மனமுருகினார், மணவாள இராமானுசம்!!

இதுபோல, தெற்கை, வடக்கு வஞ்சித்திடும் வகைகளைப்பற்றி நாம் அடிக்கடி எடுத்துக்காட்டி வருகிறோம். எனினும், வடக்காவது, தெற்காவது என்று இயம்பிடும் துணைவேந்தரின் கவனத்தைக் கவரும் என்பதால், இதோ இன்னொரு நிகழ்ச்சியையும் கவனப் படுத்துகிறோம். அவருடைய சொந்த மாவட்டமான, திருச்சி சம்பந்தமான தகவல் இது.

ஒரே ஒரு எழுத்து! அதைமாற்ற ஆறாண்டுகள் ஆயிற்றாம்!!

'I' என்கிற ஆங்கில எழுத்துக்குப் பதில் 'A' எனும் ஆங்கில வார்த்தையைப் பொருத்த, இத்துணை ஆண்டுகள் பிடித்திருக்கிறது.

திருப்பிராய்த்துறை என்று திருச்சி மாவட்டத்திலுள்ள ஊர் ஒன்றின் பெயரை திருப்பராய்த்துறை என்று மாற்றிடவேண்டுமென்று சென்னை சர்க்காரின் ரெவினியு போர்டு விரும்பிற்று. ஒரே ஒரு எழுத்து! "I" க்குப் பதில் "A" போடவேண்டும் அவ்வளவுதான்! இதற்கு ஆறு ஆண்டுகள்!!

ரெவினியுபோர்டு என்றால் மிக மிகப் பொறுப்புள்ளதாயிற்றே? அதற்கு ஏன் இவ்வளவு தாமதம்? ஒரு எழுத்தை மாற்றுவதற்கு ஏன் இத்தனை ஆண்டுகள் பிடிக்க வேண்டும்? — என்று கேட்கத் தோன்றும். அவ்வளவு தூரமா நம்து அதிகாரிகள் தூங்குகிறார்கள் என்று துயரும் கூட அரும்பும்.

நமது அதிகாரிகள் என்ன செய்வார்கள்? அந்த ஒரே ஒரு எழுத்தை மாற்றும் அதிகாரம் கூட இவர்களிடம் இல்லை! அதனால் டில்லிக்கு எழுதி 'தயவு செய்ய' வேண்டியிருக்கிறார்க்ள்!!

மனது இரங்க 'மகாகனம் பொருந்திய' டில்லிக்கு ஆறு ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. 1951 செப்டம்பர் மாதம் துவங்கிய கடிதப் போக்குவரத்து கடந்த ஏப். 12ந் தேதிதான் முடிவுற்று, சம்மதமும் கிடைத்ததாம். ஒரே ஒரு எழுத்து! ஊர்ப் பெயர் மாற்றம் கூட அல்ல, ஒரே ஒரு எழுத்து--'TIRUPPIRAITHURAI' என்பதிலுள்ள 'I' க்கு பதில் 'A' போடவேண்டியதுதான்! இதற்கு ஆறு ஆண்டுகள்!!

ஆண்டுகள் ஆறானது கூட வல்ல, இந்த ஒரு சிறுவிஷயத்துக்குக் கூட நாம், டில்லியின் அனுமதியைப் பெற வேண்டியவர்களாயுள்ளோம்.

இது, தேவையா? இப்படித் தண்டனிட்டு, சிறு விஷயத்துக்கும் அவர்களது மேன்மை தங்கிய உத்தரவுக்குக்கட்டுப்பட்டு, கிடக்க வேண்டுமா?

சுதந்திரம் என்கிற சுந்தரச் சொல்லின் பொருளையும், அதனைப் பெற்றிட மனிதன் கொண்டிடும் ஆவேசத்தையும், அது வழங்கிடும் புரட்சிப் பொறிகளையும் அறியக்கூடியவர் துணைவேந்தர். அவரையே கேட்கிறோம், டில்லி நமக்கு எந்த நன்மைகளைக் செய்கிறது? எதற்காக நாம் ஒன்று சேர்ந்து வாழவேண்டும்?

"இதெல்லாம் ஒரு கேள்வியா! கதை தெரியாதோ? நான்கு குச்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து கட்டாக இருந்தால் சுலபமாக ஒடிக்க முடியாது! பிரிந்து தனித்தனியாக இருந்தாலோ சுலபத்தில் ஒடித்து விடலாம் அல்லவா?'' என்று ஒற்றுமை உபதேசம் செய்ய முன்வரக்கூடும். இந்திய ஐக்கியம் குறித்துப் பேசிடும் எவரும் கடைசியில் விடுக்கும் வினாக்குறி, பிரிந்துபோனால் நாம் சிதைந்து சின்னாபின்னமாகிவிடுவோம் என்பதுதான். மன மருட்சியும், மக்கள் தம் உள்ளத்தில் 'ஏனடா, இந்த வம்பு?' என்கிற எண்ணமும் எழ வேண்டும் எனும் ஆசையுடனேயே இந்தக் கேள்வி கிளப்பப்படுகிறது. ஏதோ, பக்கத்துநாடுகள் எல்லாம் படைகளுடன் தாவ இருப்பதுபோலவும் அவைகளைத் தாங்கிடவேண்டுமெனின் டில்லியும் யாவும் ஒன்றாகயிருந்தால் தான் இயலும் என்பதுபோலவும் இந்தப்பயம் கிளப்பப்படுகிறது! இக்கேள்வி எழுப்புவோரைப் பார்த்துக் கேட்கிறோம், இவ்வளவு பெரியதாக இருப்பதாலேலேயே டில்லி அச்சமற்று வாழ்கிறதா? எவ்வளவு பணத்தை ஆண்டு தோறும் செலவழிக்கிறது இராணுவத்துக்கென்று!! ஆகவே, ஒரு நாடு பெரிதாக இருப்பதால் மட்டுமே, அச்சமற்று இருந்திடும் என்பதல்ல. நம்மைவிட எவ்வளவோ சிறியது ஸ்விட்சர்லாந்து. அது, கடந்த உலகப்போரின் போது, எந்த சார்புக்கும் தலை வணங்காது, போரின் புகைச் சலைக் கூட அண்டவிடாது இருந்திடவில்லையா? அது கூட வேண்டாம். இலங்கை, வாழவில்லையா? ஆகவே, சிறியநாடு என்றால் மட்டும் பிறர் அப்படியே போட்டு விழுங்கிவிடுவர் என்று கருதுவதும் தவறு; சிறியதேசங்களால் சிறப்பாக வாழமுடியாது என்று எண்ணுவதும் சரியானதல்ல. ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதற்காக, தவளையையும் பருந்தையும் போட்டுப் பிணைத்து வைத்தால் இளைத்த தவளையின் கதி என்னாகும்?

தென்னாடு, இளைத்த தவளையின் கதியிலேயே உள்ளது. இதனை, துணைவேந்தரே மறுக்கமுடியாது. பழைய பாசம் காரணமாக, இந்தியாவுக்குள் ஒற்றுமை வேண்டும் —ஒற்றுமை வேண்டும் என்று கூறிடின், அதுபோதாது! ஒற்றுமைக்கும் ஒரேயடியாகக் கலந்து வாழ்வதற்குமிடையில் எவ்வளவோ வேற்றுமைகள் உள்ளன. ஒற்றுமையாக வாழ்வது என்றால் அவரவரும் தனித்தனியாக இருப்பது — சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஏற்படும்போது ஒன்று கூடிப் பிரச்சனைகளை ஆலோசிப்பது. இந்த ஒற்றுமையல்ல, டில்லி, கூறுவதும் கடைப்பிடிப்பதும். ஒரேயடியாகக் கலந்துவிடச் சொல்கிறது தெற்கையும் வடக்கையும்! அதனால்தான், கார்டு முதல் காசுவரை சகலதுறைகளிலும் இந்தியை நுழைக்கிறது. இந்தியின்றேல் வாழமுடியாது என்கிற அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கி வருகிறது. இதையெல்லாம் துணைவேந்தர் போன்றோர் எண்ணிடல் வேண்டும். எல்லோரையும் போல ஒற்றுமைப் பல்லவி பாடுவதுமட்டும் போதாது. புதிய சக்தி, வாலிபர் தம் மனதில் வேரூன்றிடக் காரணம் என்ன என்பதை எண்ணிடல் வேண்டும். வெறுப்பு விருப்பற்றுச் சிந்தித்துப் பார்த்திடின் சிந்தை விரியும், உண்மை துலங்கும்; நாடும், வாழும்.

மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான உரிமைகளை வழங்குவதுதான் உண்மையான ராஜ்யம், வகுப்பு வேற்றுமைகளும் சலுகைவித்தியாசங்களும் சமத்துவமின்மையும் எங்கே இருக்கின்றனவோ அது உண்மையான ராஜ்யமல்ல.

—மாஜினி.

2-ம் பக்கத் தொடர்ச்சி

அந்தரங்க போலீஸ் செய்திகள் அறிவிக்கின்றன. அரசாங்கம் இன்னுமின்னும் அலட்சியமாக இருக்க முடியாது. உருவாகிவரும் அபாயகரமான நிலைமையைப்பற்றி விசேஷ கவனம் செலுத்தவேண்டும்'' என்று பிரதமர் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சர் சபைக் கூட்டத்தில் பிரலாபித்தாராம்.

அப்போது அமைச்சர் ஒருவர், "தமிழர் முயற்சியை சட்டவிரோதமாக்கிவிட்டால் என்ன? வங்கி நிதிகளைத் தடுத்து முடக்கி விட்டால் என்ன?'' என்றெல்லாம் ஆலோசனை கூறினாராம்.

அதற்குப் பிரதமர் பண்டாரநாயகா, "என்ன தடையைப் போட்டாலும் அதை மீறுவதென்று தமிழ்த் தலைவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். சொல்லுகிறபடி செய்யக்கூடிய உறுதிவாய்ந்த தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். நாமாக ஏதாவது தடைபோட்டால் அதை மீற, அதாவது அவர்கள விரும்பும் சட்ட மறுப்பை இலகுவாகச் செய்ய, நாமே சந்தர்ப்பமேற்படுத்திக் கொடுத்தவர்களாவோம். மேலும் அவர்கள் சாத்வீக அடிப்படையிலேயே சட்டமறுப்பு செய்யப்போவதாகச் சொல்லி வருகிறார்கள். இது ஜனநாயகத்துக்குட்பட்டது. அவர்கள் பலாத்காரத்தில் இறங்கினால் நாம் சட்டவிரோதமாக்கலாம். அதுவரை ஒன்றும் செய்யமுடியாது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நடவடிக்கைகளைத்தான் நாம் மேற்கொள்ள முடியும். காந்திமகாத்மா சட்ட மறுப்பு இயக்கம் நடத்திய போதுகூட பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய தேசிய காங்கிரசை சட்டவிரோத ஸ்தாபனமாக்கவில்லை. இதற்கு மாறாக நாம் நடந்துகொண்டால் ஜனநாயக உலக அபிப்பிராயத்திலிருந்து நாம் தப்பவே முடியாது'' என்று கூறினாராம்.

அதன் பின்னரே இராணுவத்தையும், போலீசையும் கொண்டு சட்ட மறுப்பு இயக்கத்தை முறியடிக்கத் திட்டமிடப்பட்டது என்று தெரியவருகிறது.

சுதந்திரன் அரசியல் நிருபர் மேற்கூறிய விபரங்கள் அனைத்தையும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனிடம் தெரிவித்து அவருடைய அபிப்பிராயத்தைக் கோரியபோதுதான் தலைப்பில் தந்ததுபோல கூறியிருக்கிறார். உணர்ச்சியோடு அவர் மேலும் கூறியதாவது:

"எதிர்வரும் ஆகஸ்ட் சட்ட மறுப்புப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டு கடைசிவரை உறுதியோடு சாத்வீக முறையில் போராடி சிறைச்சாலைகளை நிரப்புவார்களானால் ஒரு நொடிப் பொழுதில் நாம் இந்த நாட்டில் நமது கோரிக்கைகள் அனைத்தையும் பெற்றுச் சுத்த சுதந்திர புருஷர்களாக வாழ்வது திண்ணம்.''

## நேரு விஜயம்

சம்யுக்த ஜயந்திக் கொண்டாட்டங்கள் அனைத்தும் மே மாதம் 13, 14, தேதியுடன் முடிவடைகின்றன. அப்படியிருந்தும் இந்தியப் பிரதமர் பண்டித நேருவை இலங்கை அரசாங்கம், பிந்தியேனும (17-ந்தேதி) வந்து போகும்படி, வருந்தியழைக்கிறது. இப்படி அழைத்திருப்பதற்கு புத்த ஜயந்தியைவிட அரசியல் காரணம் வேறு இருக்கிறது என்று விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

நேரு இலங்கைக்கு வரும் சமயம் அவரைப் பல வழிகளில் "காக்காய்பிடித்து'' அவர் வாயிலிருந்து தமிழ் பேசும் மக்களின் ஆகஸ்ட் போராட்டத்திற்குப் பாதகமாகவும், அரசாங்கத்தின் "சிங்களம் மட்டும்'' கொள்கைக்கு ஆதரவாகவும் அபிப்பிராயங்களை வெளியிடும்படி தூண்ட வேண்டுமென மந்திரிகளில் சிலர் அந்தரங்க முடிவுகள் செய்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நயவஞ்சகத் திட்டத்திற்கு நேரு போன்ற ஒரு சர்வதேச அரசியல் வாதி மசிந்துபோவாரா என்பது இருந்து பார்க்க வேண்டிய விஷயம்.

இந்தியாவில் இந்தியைத் திணிப்பதற்கு ஆதரவாக இருக்கும் நேரு, இலங்கையில் சிங்களத் திணிப்பை ஆதரித்து பொதுக்கூட்டங்களில் அபிப்பிராயம் வெளியிட்டால்கூட ஆச்சரியப் படுவதற்கில்லை யென்றும், இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்னையைவிட, இலங்கை அரசாங்கத்தின் ஆதரவை நேரு விரும்பி நிற்பது இயற்கை என்றும், அது அவருக்கு ஆசிய நாடுகளிடையே பக்க பலத்தையும், உலக அரங்கில் செல்வாக்கையும் கொடுக்குமாதலால் ஒரு சமயம் அவர் இலங்கை அரசாங்கத்தைத் தூக்கிப் பேசத் தயங்கமாட்டார் என்றும் ஒரு தமிழ்த் தலைவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து அபிப்பிராயம் தெரிவிக்கையில், "நமது சுதந்திரத்தின் அருமை நமக்குத்தான் தெரியும். அதை நாம் உறைப்பாக வலியுறுத்தும் வரை வெளியார் நமக்கு மதிப்புத் தர மாட்டார்கள். நாம் எழுந்து நின்று நமது உரிமைகளுக்காக போராடும் போதுதான் நமது கட்சியிலுள்ள நியாயத்தை வெளியார் ஆராயத் தலைப்படுவார்கள். அதுவரை அதிகாரத்திலிருப்பவர்களுடைய பேச்சுத்தான் அம்பலத்துக்கு வரும். இது கண்டு நாம் அதைரியமடைந்துவிடக் கூடாது. எகிப்து போர்க்கோலம் பூண்ட பின்னர்தான் உலக அரங்கில் அதற்கு அபரிமிதமான ஆதரவு நாலு திசையிலுமிருந்து வளர்ந்தது. இந்த உண்மையை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது'' என்று கூறினார்.

பிரதமர் நேருவை மலைநாட்டுப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள மலைநாட்டுத் தமிழர்களுக்கும் பல வேறு போதனைகளைச் செய்யுமாறு தூண்டுவதெனவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாம். ★

## திருச்சியில் எண்ணெய்?

திருச்சியில் எண்ணெய் வயல் கண்டுபிடிப்பதில் நிபுணர்களும் ஜெர்மனியைச் சேர்ந்தவர்களுமான டாக்டர்கள் ஸ்காட், ரிட்டர் எனும் இருவர், பூகர்ப்ப ஆராய்ச்சிப் பிரிவு சூப்பரின்டெண்ட் ஆர். என். பி. ஆரோக்யசாமியுடன் அரியலூர் பெரம்பாலூர் பகுதிகளில் நிலங்களைச் சோதித்து வருகின்றனர். மண் 'சாம்பிள்'களையும் சேகரித்து வருகின்றனர். காரை, கருடமங்கலம், நன்னியூர், உதட்டூர் முதலிய இடங்களில் சோதனை நடத்தியிருப்பதாகத் தெரிகிறது.

# ★ ஏழை அழுதால்! ★

"கபர்தார்! எம்மையோ, அதிகச் சம்பளம் கேட்கின்றீர். தராவிடில் வேலை நிறுத்தமோ, செய்வீர். ஒருகை பார்த்து விடுவோம் ஜாக்கிரதை" என்று எச்சரித்திருக்கிறதல்லவா, சென்னை சர்க்கார், கிராமத்துக் கர்ணங்கள், தலையாரிகள் போன்ற 'கீழ்'வகுப்பு சிப்பந்திகளை. இவர்கள் ஒன்றும் அதிகம் கேட்டுவிடவில்லை! இப்போது ஒவ்வொரு கர்ணமும் வாங்கி வருவது ரூ. 23-தான்! இதில் பஞ்சப்படியாக வேறு ரூ. 5 தருகிறார்கள். இது போதாது, இன்னும் கொஞ்சம் ஐந்தோ, பத்தோ அதிகமாகக் கொடுங்கள் என்று கேட்பதற்குத்தான் இவ்வளவு அதட்டலையும் பரிசாக வழங்குகிறது, சென்னை சர்க்கார். இப்படி ஏழை எளியவர்களையெல்லாம் மிரட்டியும் அதட்டியும் அடக்க முனைகிறதே சர்க்கார், இது மிகமிக சாமர்த்தியமாக அரசை நிர்வகித்து மிச்சமும் மீதியும் வழங்குகிறது போலும் சர்க்கார் கஜானாவுக்கு, என்று எவரும் கருதிவிட வேண்டாம். ஏனெனில் இது ஒரு கடனாளி சர்க்கார்! தன்னுடைய மற்ற செலவுகளுக்கென்று கொஞ்சம்கூட அஞ்சாது கடன் வாங்கும் சர்க்கார் இது!! இதனை நாம் கூறவில்லை, சர்க்காரின் தணிக்கைக் கமிட்டி தெரிவிக்கிறது. 1954-லிருந்து 55-க்குள், சரியாக ஒரு ஆண்டுக்குள் 11.70-கோடி அதிகக் கடன் வாங்கியிருக்கிறது! வெளியாரிடமும், டில்லியிடமும்தான். அதாவது **நாம்** செலுத்த வேண்டி இருக்கிற மொத்த கடன் 116.97-கோடி ரூபாய்கள் இருக்கின்றன! காமராஜர் வந்த பிறகு மட்டும் 12-கோடி ரூபாய்கள் கடன் வாங்கப்பட்டிருக்கின்றன. வேறு செலவுகள் என்றதும், கடனாவது வாங்கி காலந்தள்ள நினைக்கும் சர்க்கார், ஏழை என். ஜி. ஓ.க்கள் கீழ்த்தர சிப்பந்திகள் முதலியோருக்கும் டில்லியைக் கெஞ்சியோ, பணம் படைத்த பாங்கிகளை மிரட்டியோ ஏன் கடன் வாங்கக் கூடாது? கிராம அதிகாரிகள் தற்போது கேட்கும் சம்பள உயர்வுப்படிப் பார்த்தால், ஒரு ஆண்டுக்கு 86-இலட்ச ரூபாய்தான் தேவையாம்! இதையா சம்பாதிக்க முடியாது சர்க்காரால்? செட்டிநாட்டினரின் "இந்தியன் பாங்கி" இருக்கிறதே அதுமட்டும் கடந்த ஆண்டு கிட்டத்தட்ட ஒரு கோடியை எட்டக் கூடிய இலாபம் சம்பாதித்துள்ளதாம்! பெருமையுடன் பாங்கி மானேஜிங் டைரக்டர் செட்டிநாட்டாரின் செல்வத் திருமகன் குறிப்பிட்டிருக்கிறார். இலாபம் சம்பாதிக்கும் பாங்கிகளிடமாவது கடன் கேட்டு வாங்குவது? கடன் வாங்கியே காலந்தள்ளும் சர்க்காருக்கு, சுமார் 50,000க்கு மேற்பட்ட ஏழைக் குடும்பங்களின் வயிற்றில் அடிப்பதில் தானா, கித்தாப்பும் கீர்த்தியும் இருக்கிறது? ஆண்டுக்கு 12-கோடி வாங்குவோர் மேலும் ஒரு கோடி வாங்கி ஏழைக்குத் தந்தால் என்ன! ஏழை சம்பள உயர்வு கேட்கும் போதுதான் மிரட்டவும் உருட்டவும் தெரிகிறது--மீதிச் செலவுகளுக்கென்றால் பணம் எப்படித்தான் வருகிறதோ!! ஒரு கவர்னருக்கு கொட்டிக் கொடுக்கத் தெரியும்—மந்திரிகள் ரூ. 1500க்கு மேல் வாங்கிக் கொள்ளத் தெரியும் (கேரளத்து கம்யூனிஸ்டு அமைச்சர்கள் ரூ. 300லிருந்து 500க்குள்தான் வாங்க முடிவு செய்துள்ளார்களாம்) — ஆனால், ஏழை அழுதால், அடிப்பேன் என்று அதட்டவும் தெரியும்! ஏன் இந்தப் போக்கு? ஏனிந்தக் குணம்!!

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது